# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே








சனிக்கிழமை 02.10.2021 supeedsam.com supeedsam@gmail.com


## கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி தர முடியும் என்ற



# வியாழேந்திரனின் கருத்து தொடர்ச்சியாக ஏமாற்றும் செயலே



## கலையரசன் எம்.பி. காட்டம்

(தர்மேந்திரா)

ஹரிஸ் எம். பி உள்ளிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பு ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்கின்ற பட்சத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ஒரு இரவுக்குள் தரம் உயர்த்தி தர முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்து இருப்பது எமது மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயலே ஆகும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை கலையரசன் எம். பியை நாம் தொடர்பு கொண்டு கேட்டபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹரிஸ் எம்.பி எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார்

### என்றால் ஆளுங்கட்சியில் நீங்கள் எதற்கு?



(துதிமோகன்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹரிஸ் எம்.பி எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார் என்றால் ஆளுங்கட்சியின்

02 ஆம் பக்கத்தில்...

### சிறுவர் தினத்தன்று

## காணாமல் ஆக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்



(கீதன்)

சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று தமிழர் பிரதேசங்களில் ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

## தீர்வில்லாமல் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை வழங்கக் கூடாது

### வடக்கு கிழக்கு பாதிக்கப்பட்ட மக்கள் சிவில் அமைப்புக்கள் கோரிக்கை

(அதிரன்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான திடீர் கைதுககள் நிறுத்தப்படவேண்டும், என்பதுடன் அச்சட்டம் இல்லாமலாக்கப்படவேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, கையகப்படுத்தப்படும் எமது காணிகளுக்குரிய தீர்வு, மக்களின் வாழ்வாதார பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் எடுக்கும் பட்சத்திலேயே ஜ.எஸ்.பி வரிச்சலுகையினை வழங்க வேண்டும் என்று வடக்கு கிழக்கு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

02 ஆம் பக்கத்தில்...



## நாட்டை திறப்பது ஆபத்து

(காந்தன்)

நாட்டை கட்டுப்பாடற்ற விதத்தில் திறப்பது, மீண்டும் தொற்று பரவல் ஆரம்பமாக வழிவகுக்கலாம் என இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## திருச்சி கைதிகள் தமிழ் தலைவர்களிடம் விடுத்துள்ள கோரிக்கை

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை கைதிகள், தங்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கையை

02 ஆம் பக்கத்தில்...






## ஊரடங்கு நீங்கினாலும் பயணத் தடை தொடர்கிறது!

### வெளிநாட்டில் இருந்து வருவோர் வீடு திரும்ப முடியாமல் அவதி....!

(ஜெஸ்மின்)

இலங்கையில் 42 நாட்களின் பின்னர் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட போதிலும் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதால், மக்களின் அசௌகரியமும் தொடர்வதாகவே உள்ளது.

அரசு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை தடை செய்திருப்பதாலும் இரவு நேர ஊரடங்கை பிறப்பித்திருப்பதாலும் சொந்த

02 ஆம் பக்கத்தில்...






## வியாழேந்திரன் வீட்டுக்கு முன்பாக உயிரிழந்த இளைஞன்: இளைஞனின் தாய் விடுத்துள்ள கோரிக்கை

(மட்டுநிருபர்)

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வீட்க்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பாலசுந்தரம் என்ற இளைஞனின் தாய், சர்வதேச தலையீட்டுடன் ஒரு நீதியான விசாரணை வேண்டுமென கோரியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூர அனுமதியோம்

(காந்தன்)



விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை இலங்கையில் நினைவுகூர ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலில் பங்கேற்ற இரண்டு யுவதிகளின் கையடக்கத் தொலைபேசியை ஸ்ரீலங்கா காவல்துறையினர் பறித்ததை நியாயப்படுத்தி இன்று கருத்து வெளியிட்டுள்ள அவர், அங்கு சட்டத்தரணியாக முன்நின்றவரையும் கைது செய்திருக்க வேண்டும் எனவும் கூறினார்.




## வியாழேந்திரன் வீட்டுக்கு முன்பாக

படுகொலை தொடர்பான வழக்கு நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுடன் தனது மகன் படுகொலை செய்யப்பட்டு நூறு நாட்கள் கடந்த போதிலும் இது வரைக்கும் விசாரணையில் தனக்கு திருப்தி இல்லை என தாயார் தெரிவித்துள்ளார். அரசியல் பலத்தையும் பண பலத்தையும் வைத்துக் கொண்டு தனது மகனுடைய விசாரணைகள் திசை திருப்பப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் வழக்கை விசாரணை மேற்கொண்ட நீதிபதி, குறித்த வழக்கு சி.ஐ.டிக்கு மாற்றக் கோரியும் மட்டக்களப்பு பொலிஸாரால் குறித்த வழக்கினை பிரிதொரு பிரிவுக்கு இதுவரைக்கும் பாரம் கொடுக்கவில்லை எனவும் கவலை வெளியிட்டுள்ளார்.

## திருச்சி கைதிகள் தமிழ் தலைவர்களிடம்

மேற்கொள்ளுமாறு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் நாங்கள் 9 பேரும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வந்து, எங்களது கடவுச்சீட்டு காலாவதியாகிய நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எமது விடுதலையை வலியுறுத்தி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம்.

ஆகவே தடுப்புக் காவலில் இருந்து விடுதலை பெற்றுத்தருவதற்கு தேவையான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் உடனடியாக மேற்கொள்ள முன்வர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## சிறுவர் தினத்தன்று காணாமல்

அதற்கமைய இலங்கை இராணுவத்திடம் கையளித்த சிறுவர்கள் எங்கே? எனக் கேட்டு இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மழைக்கு மத்தியிலும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது இன்று 1669 ஆவது நாளாகவும் இடம்பெற்று வருகிறது. இந்நிலையில் இன்று சர்வதேச சிறுவர் தினத்தில் இலங்கை இராணுவத்திடம் கையளித்த சிறுவர்கள் எங்கே? எனக் கோரி நீதி கேட்டு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எமது குழந்தைகளுக்கு உயிர் வாழும் உரிமை இல்லையா? இலங்கை இராணுவத்திடம் கையளித்த சிறுவர்கள் எங்கே?, உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடமா?, தமிழ் குழந்தைகள் பயங்கரவாதிகளா?, ஓமந்தையில் இராணுவத்திடம் கையளித்த உறவுகள் எங்கே?, உறவுகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்,உள்ளக பொறிமுறை சர்வதேசத்துக்கான கண்துடைப்பே, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டும், போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோல்,வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஓமந்தை பகுதியில் இராணுவத்தின் உறுதிமொழியை நம்பி கையளிக்கப்பட்ட எமது குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்டு பல வருடங்கள் கடந்தும் எமக்கான நீதி நிலை நாட்டப்படவில்லை.

ஆயினும் எமக்கான நீதியை வழங்காமல் மரணச் சான்றிதழையும் இழப்பீட்டையும் வழங்குவதாக ஜனாதிபதி கூறுகிறார் அவரது கருத்தை நாங்கள் கண்டிக்கின்றோம். தானே கொலையை செய்துவிட்டேன் எனவே மரணச்சான்றிதழை வழங்குகின்றேன் என்றவாறாகவே அவரது கருத்து அமைந்துள்ளது.

எமது தமிழ் குழந்தைகள் ஆயுதம் ஏந்தியவர்களா? அல்லது பயங்கரவாதிகளா? சிறுவர்களின் பாதுகாப்பிற்காக எத்தனையோ அமைப்புக்கள் இருந்தும் எமது குழந்தைகளை பாதுகாக்க அனைவரும் தவறிவிட்டனர். எனவே சர்வதேச சிறுவர் தினம் எமக்கு துக்க தினம் எனத் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அதேபோல்,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது,

இதன்போது அண்மையில் ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கெதிராக கோஷங்களும் எழுப்பப்பட்டன.




## தீர்வில்லாமல் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை வழங்கக் கூடாது

வடக்கு கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களும் சிவில் அமைப்புக்களும் இணைந்து மட்டக்களப்பிலுள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் வெள்ளிக்கிழமை நடத்தினர். இச் சந்திப்பிலேயே இக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இங்கு கருத்துத் தெரிவித்த திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், கடந்த கால யுத்தம் நடைபெற்ற போது சம்பூர் மக்கள் 2006ம் ஆண்டு இடம்பெயர்ந்து பத்து வருட காலமாக முகாம் வாழ்க்கையை வாழ்ந்து மீண்டும் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணிகள் அரச உடைமையாக்கப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்படாமல் இருக்கின்றது. அதிலும் 818 ஏக்கர் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டும் மீட்டுத் தரப்படவில்லை. 215 ஏக்கர் வயல் காணியில் கடற்படையினரால் முகாமிடப்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் 520 ஏக்கர் காணி அனல் மின் நிலையத்திற்கென்று அடைத்து வைக்கப்பட்டுள்ளது. அனல் மின் நிலையம் நீக்கப்பட்டும் மக்களால் அக்காணிகளால் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. சம்பூர் மக்களின் ஜீவனோபாயத் தொழில் விவசாயமாகவே இருக்கின்றது. இருந்தும் முழுமையாக விவசாயத்தில் ஈடபட முடியாமல் இருக்கின்றது. இது இங்கு மாத்திரமல்ல அம்பாறை வரை இப்பிரச்சனை இருக்கின்றது.

அத்துடன் மக்களின் உறுதி விவசாயக் காணிகளினுள் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் எல்லைகல் இடப்படுகின்றது. இதனால் விவசாயிகளில் தொழில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் சமாதானம் சமாதானம் என்று தான் சொல்லுகின்றார்கள். ஆனால் எமது மக்களுக்கு அது உள்ளதா என்பது கேள்விக்குறியே. எமது கால்நடைகளுக்கான காணிகள், வாழ்வாதாரக் காணிகள் வழக்கப்பட்ட பாடில்லை. இப்போதும் வனவள அதிகாரிகள் எல்லைகள் இடுவதும், வேலியிடுவதுமாகவே இருக்கின்றனர். மக்கள் அன்றாடம் செய்யும் தொழிலைச் செயவதற்கே சுதந்திரம் இல்லாமல் இருக்கின்றது.

ஆனால் யுத்த காலத்தில் எமது மக்கள் பாதுகாத்து வந்த மணல், மலை, குளங்கள் அனைத்தையும் யாராரோ எல்லாம் கொண்டு போய்க் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமைகளே இங்கு தொடர்ந்து இருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, கையகப்படுத்தப்படும் எமது காணிகளுக்குரிய தீர்வு. மக்களின் வாழ்வாதார பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் எடுக்கும் பட்சத்திலேயே ஜ.எஸ்.பி வரிச்சலுகையினை வழங்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எமது உறவுகள் செயற்பட்டு வருகின்றார்கள். ஒவ்வொரு மாவட்டங்களிலிலும் எமக்கான நீதியைக் கேட்கின்றோம். அதைவிட எமது நிலங்கள் தொடர்பான பிரச்சனை பாரிய பிரச்சனையாக இருக்கின்றது. எமது உறவுகளும் காணாமல் ஆக்கப்பட்டு இல்லாத நிலையில் எமது காணிகளையும் பறிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இருப்பதற்குச் சொந்த நிலமில்லாமல் அனைத்து உறவுகளையும் இழந்து அவதியுறுகின்றோம்.

பல ஏக்கர் காணிகள் வைத்திருந்த நாங்கள் இன்று அரசாங்கத்தின் ஒரு ஏக்கர் திட்டம் என்று ஒன்றைக் கொண்டு வந்து எங்கள் காணிகளை அபகரிக்கின்றது. எமது உறவுகள் இல்லை என்றால் மிகுதிக் காணி யாருக்கு? ஐரோப்பிய ஒன்றியம் வரிச்சலுகை தொடர்பில் தீர்மானிப்பதாக இருந்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விடயம், அரசியற் கைதிகள் விடயம், காணி விடயம் என்பனவற்றையும் கருத்திக் கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறமான மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் சிங்கள மக்களின் திட்டமிட்ட அத்துமீறல் காலம் காலமாக அதிகரித்துக் கொண்டு வருவதும்இ நாங்கள் பல தரப்பட்டவர்களிடம் இது தொடர்பில் முறையிட்டும் எதுவுமே சரிவரவில்லை. சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளின் மேய்ச்சற்தரை ஆளுநரின் திட்டமிட்ட செயற்பாட்டினால் பறிபோகின்ற நிலைமையிலேயே இருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசியற் கைதிகள் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு தற்போதைய ஆட்சி வந்ததும் இன்னும் பல இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அவர்களுக்கான எவ்வித நீதிவிசாரணைகளும் இடம்பெறாமல் இருக்கின்றது.

எனவே நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி வரிச்சலுகை மீள வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

## நாட்டை திறப்பது ஆபத்து

தடுப்பூசி வழங்கும் வீதம் அதிகமாகக் காணப்பட்டாலும் தற்போது இனங்காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, நாட்டை கட்டுப்பாடின்றி திறப்பதன் மூலம் முன்னரை விடவும் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்க வழியேற்படலாம் என்று அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## ஊரடங்கு நீங்கினாலும்

இடங்களுக்கு திரும்ப முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊரடங்கு உத்தரவால் வெளியூர்களில் சிக்கிக் கொண்டோரும் வெளிநாடுகளில் இருப்போர் நாடு திரும்ப தயாரான நிலையில் அங்கு சிக்கிக் கொண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

வெளி நாடுகளில் இருந்து நாடு திரும்பியோர் விமான நிலையத்தின் வெளியே சொந்த வீட்டுக்கு திரும்ப முடியாத சூழ்நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஊரடங்கை நீக்கிய அரசாங்கம் விரைவில் பயணத் தடையையும் நீக்க வேண்டும் என சம்பந்தப்பட்டோரின் குடும்பத்தினர் அங்கலாய்க்கின்றனர்.

## கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹரிஸ் எம்.பி

பங்காளிகளாக இருந்துகொண்டு உங்களால் செய்ய முடியாது என்றால் நீங்கள் ஆளுங்கட்சியில் எந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்றீர்கள். ஆட்சிக்கு வந்து மூன்றே நாட்களில் கல்முனை வடக்குகப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவதாகச் சொல்லியிருந்தார்கள், ஆனால் இன்று எத்தனை நாட்கள் போய்விட்டது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தோம், ஹரிஸ் எம்.பி ஆளுங்கட்சியின் பிரதியமைச்சராக இருந்து முட்டுக்கட்டை போட்டார். ஆனால் இப்போது அவர் எதிர்க் கட்சியில் தான் இருக்கின்றார். ஆனால், ஆளுங்கட்சியில் இருக்கும் நம் தம்பிமார் இன்னும் அவரைச் சொல்லி மக்களைப் பேய்க் காட்டக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலக தரமுயர்த்தல் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தல் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாகச் செயற்பட்டது. ஆனாலும் அது நடக்க முடியாமல் போனது உண்மைதானே தவிர அதற்கு நாங்கள் ஒரு போதும் தடையாக இருக்கவில்லை.

அப்படிப் பாடத்தால் ஆட்சிக்கு வந்து மூன்றே நாட்களில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவேன் என்று தம்பி வியாழேந்திரன் சொல்லியிருந்தார். ஆனால் இன்று எத்தனை நாட்கள் போய்விட்டது.

நாங்களாவது அன்று எதிர்க்கட்சியில் இருந்து ஏதோவொருவகையில் உடன்பாட்டுடன் சில சில விடயங்களைச் செய்திருந்தோம். கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்த முடியாமற் போனதென்பது துரதிஸ்டம்.

ஆனால், ஆளுங்கட்சியில் பங்காளிகளாக இருக்கின்றோம், நாங்கள் சொல்லுகின்ற விடயங்களை எல்லாம் அரசாங்கத்திலுள்ளவர்கள் செய்வார்கள், அரசியற் கைதிகளையெல்லாம் விடுதலை செய்து தருவோம் என்றெல்லாம் வாய் கிழிய பேசிய வார்த்தைகளை மக்கள் மறக்கவில்லை. எனவே நாங்கள் தடையாக இருந்தோம் என மக்களிடம் பொய்களைச் சொல்லி பொய்கள் மூலமாக அரசியல் செய்வது நிலைக்காது. கடந்த காலங்களில் இந்தப் பொய்களுக்குரிய பாடம் புகட்டப்பட்டது. ஆனால் தேர்தல் மோசடி மூலமாக வெற்றி பெற்றனர்.

நாங்கள் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் அன்றும் இன்றும் என்றும் எப்போதும் உறுதியாக இருக்கின்றோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் இப்போதும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்கள் தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அன்று நல்லாட்சியில் ஹரிஸ் அவர்கள் ஆளுந்தரப்பில் ஒரு பிரதி அமைச்சராக இருந்தவர். அவர்களின் கட்சியிலுள்ளவர்களெல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள் அதனால் தடைகள் பலவற்றைப் போட்டிருக்கலாம். ஆனால் இப்போது ஆளுங்கட்சியின் பங்காளிகளாக மட்டக்களப்பில் இருவர் இருக்கின்றாடர்கள். ஹரிஸ் எம்.பி இப்போது எதிரணியில் இருக்கின்றார். ஹரிஸ் எம்.பி எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார். ஆளுங்கட்சியின் பங்காளிகளாக இருந்துகொண்டு உங்களால் செய்ய முடியாது என்றால் ஆளுங்கட்சியில் நீங்கள் எந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்றீர்கள் என்ற விடயத்தைச் சிந்திக்க வேண்டும்.

நல்லாட்சியில் ஆளுந்தரப்பில் இருந்து அவர் முட்டுக்கட்டை போட்டார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் இன்று அரசாங்கத்தின் பக்கமாக இருவர் இருக்கின்றீர்கள். இருந்து விட்டு ஹரிஸ் எம்.பி இப்போதும் தடையாக இருக்கின்றார் என்ற நீங்கள் சொன்னால் ஹரீசின் அரசியல் என்ன உங்களின் அரசியல் என்ன. எனவே இவையெல்லாம் மக்களின் காதுகளில் பூச்சுத்துகின்ற கருத்துகளாகவே இருக்க முடியும் என்று தெரிவித்தார்.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி தர முடியும்

வியேழேந்திரன் கடந்த தேர்தல் காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல இடங்களுக்கும் வந்து மேடை பேச்சுக்களை மேற்கொண்டார். ராஜபக்ஸ அரசாங்கத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நிச்சயம் தரம் உயர்த்தி தரப்படும் என்று முழங்கினார்.

ஆனால் அவர் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக வந்த பிற்பாடு ஒரு நாள்கூட இன்னமும் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தரவே இல்லை. அம்பாறை மாவட்டத்தில் உள்ள எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக எந்த அக்கறையையும் உண்மையில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.




எனவே இவருக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பாக பேசுவதற்கு உண்மையில் எந்த அருகதையும் கிடையாது. அது மட்டும் அல்லாமல் அவரின் கருத்து தொடர்ந்தும் எமது மக்களை ஏமாற்றுகின்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

மட்டும் அல்லாமல் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தி தரப்படுவதற்கு ஹரிஸ் எம். பி உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்புதான் தடையாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது, இப்படி இருக்க ஹரிஸும், மு. காவும் பிரச்சினை இல்லை என்று சொல்கின்ற பட்சத்தில் ஒரு இரவுக்குள் தரம் உயர்த்தி தர முடியும் என்று வியாழேந்திரன் சொல்லி இருப்பது கேலி கூத்தும், பசப்பு வார்த்தையுமே ஆகும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினைக்கான தீர்வு ஹறிஸ் எம். பி உள்ளிட்ட மு. கா தரப்பினரிடம்தான் உள்ளது என்றால் கடந்த காலங்களில் இவரும், அரசாங்கமும் எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் போலியானவை என்பதுடன் இவ்விடயத்தில் இவர், அரசாங்கம் ஆகியோரின் இயலாமையும் வெளிப்பட்டு நிற்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் வெகுவிரைவில் வறிய மாவட்டமாக மாற கூடிய அபாயம் கண் முன் தெரிகின்றது. வரட்சியான மாவட்டமாக அது விரைவில் மாறும் என்று கவலைப்பட வேண்டி உள்ளது. ஏனென்றால் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.மணல் கொள்ளைகள் அங்கு பரவலாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அங்கு உள்ள மக்களின் அன்றாட, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை.

அரசாங்கம் மூலமாக தமிழ் மக்களுக்கு தீர்வுகளை பெற்று கொடுப்பார் என்று காட்டி கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர் வியாழேந்திரன். ஆனால் அவரால் எந்தவொரு சிறிய தீர்வைக்கூட மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கேனும் பெற்று கொடுக்க முடியாமல் உள்ளது என்பதே உண்மை நிலை ஆகும்.

குறுகிய சுய இலாப அரசியலையே வியாழேந்திரன் மேற்கொண்டு வருகின்றார். தேர்தல் மேடை பேச்சு போன்ற ஒன்றையே இப்போதும் நடத்தி இருக்கின்றார். தமிழ் தேசிய கூட்ட்டமைப்பு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி பெற்று தருவதற்கு இதய சுத்தியுடன் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. நாம் காட்டி கொடுப்பவர்களோ கூட்டி கொடுப்பவர்களோ அல்லர்.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!

**சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக் கழகமான** The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) **தனது** Foundation studies **கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது .இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள** AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) **கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.**




# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

**மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya – 077 4898 773**


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59



# ஆறுகள், குளங்களை மையமாக வைத்து சட்டவிரோத செயற்பாடு

## பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட்டாக இணைய வேண்டும்

(படுவான் பாலகன்)

உலகத்தினை கொவிட் 19 கொரோனா தொற்றின் மூலமாக இயற்கை அடக்கி வைத்திருந்தாலும், பல்வேறான குற்றச்செயல்களும், சட்டவிரோத செயற்பாடுகளும் நடந்தேறிய வண்ணமே உள்ளன. இயற்கை அழகும், மனதிற்கு இதமும் கொடுக்கின்ற இலங்கைத்தீவில் அழுக்கான செயற்பாடுகளும் நடந்தேறி வருகின்றமை கவலையானதொன்றே. நாட்டினை தலைமையேற்று நடத்துகின்ற அரசாங்கமும் பல்வேறான சட்டங்களை நிறைவேற்றினாலும் இன்னமும் குற்றச்செயல்களும், சட்டவிரோத செயற்பாடுகளும் முடிந்தபாடில்லை. ஆரோக்கியமானதும், நல்லொழுக்கம் கொண்டதுமான சமூகத்தினை கட்டியெழுப்ப வேண்டுமென கோசங்கள் இட்டாலும் கிராமங்களில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களை முறியடிக்க அல்லது முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் இருப்பதும் கவலையானதொன்றே.

நாட்டில் சட்டபூர்வமான முறையில் மதுபான சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கையில், அவற்றிற்கும் மேலாக சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. சட்டவிரோத செயல்களுக்கு எதிரான சட்டங்கள், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறையினர் உள்ளிட்ட அரச ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை.


மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் இடம்பெறுவதை அறிகின்றோம். அதிலும் மட்டக்களப்பின் படுவான்கரைப்பகுதியில், ஆறுகள், குளங்களை அண்டிய பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அண்மையில் கண்டியநாறு, அடைச்சல் போன்ற குளங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாகவும், அதனால் அக்குளங்களில் உள்ள மீனனங்கள் இறப்பதாகவும் செய்திகள் வெளியாகிருந்தன. அப்பகுதியில் இருந்து பெருமளவிலான கசிப்புக்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. அதேபோன்று சாமந்தியாறு, புளுகுணாவை குளம், விளிம்பாகுளம், சிறையாத்தீவு போன்ற பகுதிகளிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டிருந்தன. இவ்வாறு அமையும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகளை, அதிகளவில் சாதாரண மக்களே அருந்துகின்றனர். இவ்வுற்பத்திகளினால் சமூகம் சீர்குலைக்கப்படுவதுடன், உடல் ஆரோக்கியத்திலும் பாதிப்பு ஏற்படுகின்றது.



இளம் சமூகத்தினரும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையும், அதற்கு அடிமையாகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது. எனவே மாவட்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் இச்சட்டவிரோத செயற்பாடுகளை இல்லாமல் ஆக்குவதற்கு ஒன்றாக இணைய வேண்டும். சமூக நலனில் அதீத அக்கறை கொண்டு, ஆரோக்கியமானதும், ஒழுக்கமானதுமான சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும். இதற்கான பூரண ஒத்துழைப்பினையும், தடைகளையும் நீக்குவதற்கு மக்கள் பிரதிநிதிகளும் முன்வர வேண்டும். இவற்றிற்கு ஆதரவாக, துணையாக செயற்படுபவர்களையும் சமூகத்திற்கு தெரியப்படுத்தி அவ்வாறானவர்களையும் சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டம் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அற்ற மாவட்டம் என்ற நற்பெயரினைப் பெற வேண்டும். வீதி, வீடு, பாலம், கட்டிடம் இவைகள் மட்டும் அபிவிருத்திகள் அல்ல. மக்களிடத்திலும் அபிவிருத்தி இடம்பெற வேண்டும். குறிப்பாக இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் நீங்கிய அபிவிருத்தி



இடம்பெற வேண்டும். இவ் அபிவிருத்தியை அனைவரும் இணைந்தால் இலகுவாக மேற்கொள்ள முடியும். இல்லையாயின் இருண்ட உலகிற்கு மக்கள் செல்வதை தடுக்கமுடியாமல் போய்விடும்.



# பரீட்சையும், மாணவர்களும்


இலங்கையின் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் ஒரு மாணவனின் புலமை பெற்றவர் என்பதை நிறுபிக்கும் பரீட்சைகள் மூன்று நிலைகள் உள்ளன. தரம் ஐந்தில் நடை பெறும் புலமைப் பரீட்சை (Scholarships) பதினொராம் தரத்தில் நிகழும் சாதாரண தர பரீட்சை (ordenry level ), பதின்மூன்றாவது தரத்தில் நிகழும் உயர்தர பரீட்சை (advance level ) இம்மூன்று பரீட்சைகளும் ஒரு மாணவனின் கல்வித் தகைமையை வைத்து புலமைகள் தீர்மாணிக்கப்படுகின்றன. அதையும் தாண்டி இம்மூன்று பரீட்சையில் சித்தியடையாத பலபேர் பல துறைகளில் சாதனை படைத்தவர்களும் இலங்கையில் இருக்கின்றார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

புலமைப் பரீட்சை பெற்றோர்களின் பரீட்சை எனவும் , சாதாரண பரீட்சை ஆசிரியர்களின் பரீட்சை எனவும் , உயர்தரம் மாணவர்களின் பரீட்சை எனவும் கூறப்படுகின்றது . இவ்வாறு கூறப்பட்டாலும் முழுப் பரீட்சைகளும் மாணவர்களின் பரீட்சை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் ஒரு மாணவனின் முயற்சிதான் எல்லா பரீட்சைகளின் வெற்றியில் தங்கியுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு தகுதி என்பது இரு பிரிவிகளில் தங்கியுள்ளது. சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களிலும் சித்தி பெற்றவர்கள் உயர்தரத்தை பாடசாலையில் கற்கலாம். ஒன்பது பாடங்களிலும் ஆறு முக்கிய பாடங்களில் அதிலும் முக்கியமான பாடங்களான , கணிதம் , தமிழ் இரண்டு பாடங்களிலும் ஏதேனும் ஒரு பாடத்திலும் எந்த வித பெறுபேறுகள் பெறாதவர்கள் அடுத்த முறை சாதாரண மாணவர்களுடன் இணைந்து அப்பாடத்தை படித்தி பரீட்சை எழுதி சித்தியடையவேண்டும்.

இவ்வாறானவர்களுக்கு பாடசாலையில் உயர்தரம் படிக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும் உயர்தரத்திற்கு தகுதி பெற்றும் பாடசாலை தவிர்ந்த வேறு இடங்களுக்கு சென்று படித்து பரீட்சை private ஆக எழுதுபவர்களும் உள்ளனர்.

உயர்தரம் மாணவர்களின் பரீட்சை என அழைகப்படுகின்றது. காரணம் என்னவென்றால் ஒரு மாணவனின் வாழ்க்கையை தன்னைத் தானே சிந்தித்து துணிவுடன் அவனுடைய ஆசை , திறமை என்பவற்றை பயன்படுத்தி அவன் தனக்கு தேவையான ஆசையான பிரிவைத்தெரிவு செய்கின்றான். இதற்கு விடா முயற்சி என்பது ஆசிரியரோ பெற்றோரோ அல்லா. மாறாக மாணவர்கள் மட்டுமே.



இப்பரீட்சை மூன்று தடவை எழுதலாம். அதற்கு மேலும் எழுத முடியும் மூன்று தடவை எழுதினால் மட்டுமே இலங்கையின் தேசிய பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியும். மூன்று தடவைகளுக்கு மேல் எழுதினால் அரச பல்கலைக் கழகம் தவிர்ந்த பல்கலைக்கழகம் செல்ல முடியும். குறிப்பாக உயர்தரத்தில் கல்வி கற்பதை தெரிவு செய்யும் உரிமை மாணவர்களில் மட்டுமே தங்கியுள்ளது.

ஆசிரியர் , தாய் தந்தையின் கையில் தங்கியிருக்கவில்லை. மாறாக ஒரு மாணவருக்கு இந்த துறையை கற்கவேண்டாம் என்று கூறுவதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை. எனினும் ஆலோசனைகளை வழங்க முடியும்.

மாணவர்கள் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தனது இலக்கை அடைய துணிந்து நிற்க வேண்டும். ஒரு தடவையோ , இரு தடவையோ தோல்வி அடைந்தாலும் நான் மூன்றாவது தடவை வெற்றி பெறுவேன் என்ற தன்னம்பிக்கை இருக்க வேண்டும்.

இதில் முக்கியமான ஒரு விடயம், ஒரு துறையை தெரிவு செய்துவிட்டு அந்தத்துறை கடினமாக இருந்தால் வேறு துறையில் படிக்கவும் முடியும். நீங்கள் ஒரு தடவை எதேனும் காரணங்களினால் படிக்கவில்லை என்றால் அடுத்த முறை எழுத முடியும்.

இரண்டு தடவைகள் அனைத்து பாடங்களிலும் தோல்வி அடைந்து விட்டு மூன்றாவது முறை மூன்று ‘‘ஏ ’’ சித்திகளைப் பெற்று வைத்தியர்களாக உருவாகிய வைத்தியர்களும் இந்நாட்டில் உண்டு. ஒரு மாணவன் உயர்தரம் படிக்கும் போது பல சவால்களை எதிர்கொள்வார்கள். குடும்பத்தினர்கள், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் பலர் ‘‘நீ எங்க engineer, doctor , lawyer, teacher ஆகப்போர’’ என கூறுவார்கள் இதையெல்லாம் கண்டுகொள்ளாதீர்கள். தான் செய்து காட்டுவேன் என்ற ஊக்கத்துடன் படியுங்கள். பகுதி நேர வகுப்பிற்கு சென்று தான் படிக்க வேண்டும் என்பதில்லை. படிக்கும் மாணவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தே படித்து தனது இலக்கை அடைவார்கள்.

தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்து இலக்கை அடைவதற்கான முயற்சிகளை செய்யும் போது நிச்சயமாக நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**(பஹ்ரியா பாயிஸ் - ஹெம்மாதகம)**




# இந்திய வானொலியில் இலங்கைத் தமிழ் பாடல்கள்

கடந்த 26,09.2021 அன்று தமிழ்நாடு, சென்னையிலிருந்து ஒலிபரப்பாகியது. இணையத்தள வானொலியான Verticalradio. in என்ற வானொலியில் ‘இலங்கைத் தமிழ் பாடல்கள்’ என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது.

நிகழ்ச்சியை முழுவதுமாக கேட்டேன் அம்பிகா சண்முகம் அவர்களின் தொகுப்பில் நிகழ்ச்சி அழகுபெற்றது. இந்த நிகழ்ச்சியில் எமது மண்ணின் மைந்தனும்,பல்துறைக் கலைஞனும்,முன்னாள் இலங்கை வானொலி பணியாளருமான கோவிலூர் செல்வராஜன் அவர்களின் பாடல்கள் ஒலிபரப்பாகின. அவர் இயற்றிய பாடல்களும், அவர் பாடியபாடல்களும், இசையமைத்த பாடல்களும் இடம்பெற்றன. ஆரம்பத்தில் கவிஞர் கோவிலூர் பற்றிய அறிமுகமும்,ஒவ்வொரு பாடல்களுக்கும் இடையில் அவர் பெற்ற விருதுகள்,பரிசுகள் பற்றிய விபரங்கள் பாராட்டுக்கள் என்று தொகுப்பு மிளிர்ந்தது. நிகழ்ச்சிக்குள் கவிஞர் அறிமுகத்தை சிறப்பாக செய்தார் தொகுப்பாளினி அம்பிகா அவர்கள். ஒருமணி முப்பது நிமிடம் இலங்கைப்பாடல்களை கேட்க கிடைத்ததுபுதிய அனுபவம். இலக்கைபபாடல்களுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்கிய நிகழ்ச்சி அது.

கோவிலூர் செல்வராஜன் பல்துறைக் கலைஞன். அவர் எழுதிய பாடல்கள் அவரின் குரலிலும், இன்னும் சிலரின் குரலிலும் ஒலித்தன. பாபா பற்றிய பக்திப்பாடலோடு தொடங்கிய நிகழ்ச்சி, பல்வேறு இடங்களை நோக்கி எம்மை இழுத்துச் சென்றது. ஆழமான கருத்துள்ள பாடல்கள். வெளிநாட்டு வாழ்க்கை,இலங்கையில் வாழ்வைத் தொலைத்தமை,வயல் நிலப் பாடல், இழந்துபோன கடற்றொழில்,களப்பு மீன்பிடித் தொழில்,என்று பாடல்கள் அமைந்திருந்தன.

பாடிய குரல்களும் மிக அருமை. நிகழ்ச்சி தொகுப்பாளருக்கு பாராட்டுக்களும், மனமுவந்த நன்றிகளும். கலைஞர் கோவிலூர் செல்வராஜன் அவர்களுக்கும்,பாடகர்,பாடகிகளுக்கும் வாழ்த்து மாலைகள். பாடல்களுக்கு இசையமைத்த எம். பி கோணேஷ் ,ஜோசுவாராஜன்,செல்வா கணேஷ் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள். இப்படிப்பட்ட முழுக்க முழுக்க இலங்கை பாடல்களை எடுத்து பிரதி ஞாயிறு தோறும் ஒலிபரப்பு செய்யும் Verticalradio. in வானொலி நிறுவனத்தார் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள். இந்த வானொலிக்காக நெதர்லாந்து நாட்டிலிருந்து தொகுத்து வழங்கும் அம்பிகா சண்முகம் அவர்களை நாம் வெகுவாக பாராட்டுகின்றோம்.

இதுபோன்ற நல்ல நிகழ்ச்சிகள் தொடரவேண்டும்.

**-பாவேந்தல் பாலமுனை பாறூக் -**


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# Street Child ஊடாடும் வள கற்றல் மையம் மட்டக்களப்பில் திறப்பு


(துதிமோகன்)



Street Child Srilanka நிறுவனம் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்து செயற்படுத்தும் ஊடாடும் வள கற்றல் மையம் திறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள இந்த ஒலிப்பதிவுக் கூடம் மற்றும் கற்றல் மையம் என்பது இலங்கை சுவிட்சர்லாந்து தூதரகத்தால் நிதி வழங்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில் இலங்கையில் பாடசாலை மூடல்கள் நீடிப்பதால், மாணவர்களுக்கான ஊடாடும் கற்றல் பொருட்கள் உருவாக்க ஒரு ஊடாடும் வள கற்றல் மையத்தின் வடிவமைப்பு உட்பட 3 முக்கிய நிலைகளை இந்த திட்டம் கொண்டுள்ளது. இரண்டாவது கட்டம் மாணவர்களுக்கு வீட்டிலேயே கற்றலைத் தொடரத் தேவையான ஒரு வீட்டு அடிப்படையிலான கற்றல் திட்டத்தை உள்ளடக்கும்.

இத்திட்டத்தின் இறுதிக் கட்டம் பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது வகுப்பறையில் உள்ளடக்கிய மற்றும் ஊடாடும் கற்றலை இணைக்கும் ஆசிரியர்களின் திறனை வலுப்படுத்தும் முகமாக இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன், கிராமிய வளர்ச்சித் துறையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் என்.தனஞ்செயன் மற்றும் மட்டக்களப்பு வையக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குகேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட வேளை அம்பாறை மாவட்டம் பொத்துவில் நிலை

(எம்.ஏ.றமீஸ்)



கொவிற் தொற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த பயணத் தடை நேற்று அதிகாலை தளர்த்தப்பட்ட வேளையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதற்கமைவாக, அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் உள்ள மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது. நீண்ட காலமாக மூடப்பட்டுக் காணப்பட்ட பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டன.

இவ்வாறு திறக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் மக்கள் சுகதார நடைமுறைகளைப் பின்பற்றி பொருட் கொள்வனவில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள பகுதிகளில் சுகாதாரத் துறையினரின் மிகுந்த கண்காணிப்புக்கு மத்தியில் மக்கள் பொது இடங்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் சென்று தத்தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்கள் சேவையில் ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது. குறைந்த பயணிகளே பொதுப் போக்வரத்து வாகனங்களில் பயணங்களை மேற்கொண்டனர்.

இதேவேளை பொதுமக்கள் பெருமளவில் ஒன்றுகூடும் நிலைமைகளைத் தவிர்க்கும் வகையில் கேந்திர நிலையங்களில் சுகாதாரத் துறையினரும், பாதுகாப்புப் படையினரும் சேவையில் ஈடுபட்டனர்.

நோய்த் தொற்று ஏற்படாத வண்ணம் வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் கூடி நிற்பது தவிர்க்கப்பட்டு போதுமான இடைவெளிகளில் மக்கள் நிறுத்தப்பட்டு வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொது மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பேருந்து தரிப்பு நிலையங்கள் போன்றவற்றில் மக்கள் கூட்டம் சற்று அதிகளவில் காணப்பட்ட போதிலும், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் போன்றவற்றில் சுகாதார அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டு மக்கள் அதனைப் பின்பற்றி செயற்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

# பெருந்தோட்டத் தொழில் துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்

## சிலொன் தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(க.கிஷாந்தன்)

தோட்ட அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, சந்தர்ப்பமொன்றை வழங்கவேண்டும். தோட்ட அதிகாரிகளின் கோரிக்கை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுமானால் பெருந்தோட்டத் தொழில் துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்.'' – என்று சிலொன் தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நுவரெலியா ரதல்லயில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் ஊடக பேச்சாளர் ரவீந்திர சேனரத்ன இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'' தோட்ட முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள் உட்பட தோட்ட அதிகாரிகள் என்றால் யார், நாட்டின் பொருளாதாரத்துக்கு அவர்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றனர் என்பது தொடர்பிலும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இதற்கு முன்னர் நாம் எடுத்துரைத்திருந்தோம். தோட்ட அதிகாரிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரினோம்.

ஆனால் இவை தொடர்பில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் உரிய கவனம் செலுத்தவில்லை. எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கலாம். அதைகூட செய்யவில்லை. தோட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவு என்ற போதிலும் அவர்களால் பொருளாதாரத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அப்படி இருந்தும் பணி புறக்கணிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் நாம் ஈடுபடவில்லை. கௌரவமான முறையில் தொழிலில் ஈடுபட்டு வந்தோம்.



எனினும், இனியும் பொறுமைகாக்க முடியாது. நாளாந்தம் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. எனவே, எமது பிரச்சினைகள் தொடர்பில் செவிசாய்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெருந்தோட்டத்துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்.

உரப்பிரச்சினை உள்ளது. இதனால் தேயிலை உற்பத்தி 40 வீதத்தால் குறையும் அபாயம் உள்ளது. கிருமி நாசினிகள் இன்மையால் தேயிலை தோட்டங்களும் காடாகி வருகின்றன. இந்நிலையில் 1000 ரூபா சம்பளமும் வழங்க வெண்டும். உற்பத்தி குறையுமானால் பெருந்தோட்டத்துறையை எப்படி முன்னெடுப்பது?

இரசாயன உரமா, சேதன பசளையா என்பது பிரச்சினை அல்ல. தேயிலை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி எமக்கு விஞ்ஞான பூர்வமான முறைமையொன்றை வழங்க வேண்டும். தற்போதைய நிலைமை தொடர்ந்தால் தொழிலாளர்களுக்கு 3 நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கக்கூடியதாக இருக்கும். தேயிலை தொழிலுடன் நேரடியாகவும், முறைமுகமாகவும் சுமார் 20 லட்சம் பேர் தொடர்புபட்டுள்ளனர். இதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடும்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு நேரம் வழங்கப்பட வேண்டும்.

தோட்ட அதிகாரிகள்தான், தோட்ட தொழிலாளர்களுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளனர். தற்போது முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. தோட்ட அதிகாரிகள் தாக்கப்படும் மூன்றாவது சம்பவமும் பதிவாகியுள்ளது. எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு இல்லையேல் கடும் நடவடிக்கையில் இறங்குவோம்.'' – என்றார்.

# ஒன்றரை மாதங்களின் பின்னர் கிழக்கு மாகாணம் வழமைக்குத் திரும்பியது





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து ஒன்றரை மாதங்களின் கிழக்கு மாகாணத்தில் அன்றாட நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின.

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து நேற்று காலை மாகாணத்திற்குள் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

பயணிகள் அனைவரும் கொரோனா சுகாதார நடை முறைகளைப் பேணி பயணத்தை மேற்கொண்டனர்.கைகளைச் சுத்தம் செய்து,முகக்கவசம் அணிந்து,சமுக இடைவெளிகளைப் பேணி பஸ்களில் பயணிகள் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

நகரில் கடைகள் பொதுச் சந்தைகள் தனியார் நிறுவனங்கள் திறந்திருந்தன.

நீண்டநாட்களின் பின்னர் மக்கள் நகரங்களுக்கு வருவதால் மக்கழெள மனதில் மகிழ்ச்சி காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

# பதிமூன்று வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சிறுமியின் தந்தை கைது

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர் பகுதியில் பதிமூன்று வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் சிறுமியின் தந்தையை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 38 வயது உடையவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர். தாய் வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளதாகவும் சிறுமியின் தாயின் தங்கையின் வீட்டில் வசித்து வந்த போது சிறுமியின் தந்தை மதுபோதையில் வருகை தந்து சிறுமியை அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் கிண்ணியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 13 வயதுடைய சிறுமி தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கைது செய்யப்பட்ட தந்தையை திருகோணமலை நீதிமன்றில் இன்று (01) ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வு தம்பலகாம பிரதேசத்தில்





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

சர்வதேச சிறுவர்கள்,முதியோர்கள் தினமான நேற்று தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தம்பலகாமம் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது கல்மெட்டியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள வளாகத்தில் இடம் பெற்றது. ''அனைத்திற்கும் முன்னுரிமை குழந்தைகளே'' எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து கொண்டு மரக்கன்றுகளை சிறுவர்கள் சகிதம் நட்டு வைத்தார்.

இதனை தொடர்ந்து சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான பலா மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள்,கிராம சேவகர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ,முதியோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நாளாந்த நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்கு....







(க.கிஷாந்தன்)

ஊரடங்குச் சட்டம்நேற்று காலை தளர்த்தப்பட்டதையடுத்து மலையகத்தில் நகரங்களிலும், பெருந்தோட்டப்பகுதிகளிலும் நாளாந்த நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்கு திரும்ப ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்கள், அத்தியாவசிய சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள் தமது பணிகளை இன்று முன்னெடுத்தன.

அரச மற்றும் தனியார் துறையினர் பணிகளை ஆரம்பிக்கும்போது சமூக இடைவெளி, ஆளணி பலம் உட்பட பின்பற்றவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நடைமுறை பின்பற்றப்படுவதை காணக்கூடியதாக இருந்தது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளாட்சி மன்றங்களில் ஒத்துழைப்புடன் தொற்றுநீக்கி தெளிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது. பஸ் தரிப்பிடங்களிலும் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்யும் மொத்த மற்றும் சில்லறை வியாபார நிலையங்களில் தட்டுப்பாடாக உள்ள பொருட்கள் இன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

நகர்ப்பகுதிகளுக்கு வந்த மக்களுள் பெரும்பாலானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினாலும் சிலர், முகக்கவசம்கூட அணிந்திருக்கவில்லை. சமூக இடைவெளியின் முக்கியத்துவத்தையும் இன்னும் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர்.

வழமைபோல் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர். அரச மற்றும் தனியார் துறை பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. முச்சக்கர வண்டிகளும் சேவையில் ஈடுபட்டன. ஒரு சில பஸ்களில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீரம், செல்வம், ஞானம் வேண்டி நவராத்திரி விழா..!



( அ.அச்சுதன்)

இந்துக்கள் கடைப்பிடிக்கும் சைவ விழாக்கள் விரதங்களுள் நவராத்திரி விரதமுமொன்றாகும் இது வீரம், செல்வம், ஞானம் வேண்டி முப் பெரும் சக்திகளான துர்க்கை, லக்சுமி, சரஸ்வதி தேவியரை போற்றி புகழ்ந்து அனுஸ்டிக்கும் சக்திவிரதமாகும்.

இது இவ்வருடம் புரட்டாதி 21ல் பூர்வபட்சம் வளர்பிரை பிரதமைத் திதியில் அமாவாசை தொடர்பற்ற ஆஸ்வீஜ சுத்தமுள்ள 0%102021 வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

மனித வாழ்க்கைக்கு அவசியம் தேவைப்படும் இந்த மூன்று (வீரம்,செல்வம்,கல்வி) பேறுகளையும் பெற்று வையத்தில் வாழ வேண்டுமென்று காலங்காலமாக ஆசார சீலமுடன் தமிழின மக்கள் நவராத்திரி விரத நாளை விழாவெடுத்து கொண்டாடி வருவது வழக்கம்.

அந்த வகையில் இந்த வருடமும் நவராத்திரிக்கும்ப நிகழ்வுகள் இந்து ஆலயங்களிலும், விசேடமாக அம்மன் ஆலயங்களிலும் கும்பஆவாகனத்துடன் விரத அனுஸ்டானமும் பூசையும் நடைபெறும். விஜய தசமியுடன் பத்து நாள் இடம் பெறும் நவராத்திரி விரதம் இவ் வருடம் ஒன்பதாவது நாளன்று விஜயதசமி கன்னிவாழை (ஸமிவிருட்ச பூசையுடன்) வெட்டி கும்பந் தூக்கும் சொரிதலுடன் நிறைவுக்கு வருகிறது குறிப்பிடத்தக்கது.



சரஸ்வதி பூசை மூலநட்சத்திரம் வரும் 12102021 செவ்வாய்க்கிழமை முதல் திருவோண நட்சத்திரம் வரும் 14102021 வியாழக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறவேண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மகா நவமி உபவாசம் 14102021 வியாழக்கிழமை முன்னிரவு 10.28 வரையாகும் அன்றைய தினமே சரஸ்வதி பூசை மூன்றாம் நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன் பின் தசமி இது விஜய தசமி என விசேடமாக கொள்ளப் படும்.

15102021 வெள்ளிக்கிழமை விஜயதசமியில் கல்விசெயற்பாடுகள், கலை, வீரவிளையாட்டுக்களை ஆரம்பிக்க ஏற்ற சுப நேரம் காலை 06 02 முதல் 0%32 வரை. இதே தினம் கேதார கௌரி விரதக்காப்பு விரதமும் ஆரம்பம் இது 21 நாட்கள் கொண்ட சிவ விரதமென்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்கள் மத்தியில் பரவி வரும் புதிய வகை வைரஸ்



இந்த நோய் மருத்துவத்துறையை பொறுத்த வரையில் HandFootMouth Disease என அழைக்கப்படும். சரியாக மொழிபெயர்த்தால் கை கால் வாய் நோய் என பொருள்படும். இது ஒரு வகையான வைரஸால் (Coxsackie Virus) ஏற்படும் ஒரு மிருதுவான (இலேசான) நோயாகும்.

தற்போதைய அதிக வெப்பமான கால நிலையால் இந்த நோய் அதிகமாக பரவி வருகின்றது. இது குறிப்பாக பத்து வயதிற்கு குறைந்த குழந்தைகளை தாக்கும். அதிலும் குறிப்பாக ஐந்து வயதுக்கு குறைவான முன்பள்ளி சிறுவர்களை அதிகமாக பாதிக்கிறது.

இந்த நோய்க்கான அறிகுறிகள்

★ இலேசான காய்ச்சல்

★ தொண்டை வலி

★ சிறு கொப்பளங்கள் கை கால் (குறிப்பாக முழங்கால்) வாய் மற்றும் பின் பகுதிகளில் (Buttocks) தோன்றுதல்.

இந்த கொப்பளங்கள் சிலவேளைகளில் சிறு வலியையும், கடியையும் ஏற்படுத்தும் ( கீழுள்ள படங்களில் இந்த கொப்பளங்களைப் பார்க்கலாம்)

நாம் பொதுவாக இந்தப் கொப்பளங்களை பார்த்து அம்மை நோய் (அம்மாள் நோய்) வந்துவிட்டதாக கருதினாலும், இது உண்மையில் அம்மை நோய் அல்ல.

இந்த நோய் பரவும் வழிகள்

இது குறிப்பாக பாதிக்கப்பட்ட மற்றைய சிறுவர்களிடமிருந்து பரவுகிறது

★ உமிழ் நீரின் மூலம்

★ மூக்கில் இருந்து வழியும் நீர்மூலம்

★ கொப்பளங்களில் இருந்து வரும் நீர்மூலம்

★ இருமும் போது ஏற்படும் துகள்களின் மூலம்

இந்த நோய்க்கான மருந்துகள்

இது ஒரு இலேசான நோய் என்றாலும் சில வேளைகளில் குழந்தைகளுக்கு சிக்கல் நிலைமையை ஏற்படுத்திவிடுகிறது. பொதுவாக வாயில் ஏற்படும் கொப்புளங்கள் காரணமாக அவர்கள் உணவு உண்பதை தவிர்ப்பதால் உடலிலிருந்து நீரிழப்பு (Dehydration) ஏற்படுகின்றது.

அதைவிட மிக மிக அரிதாக மூளைக் காய்ச்சல் போன்ற அறிகுறிகளையும் ஏற்படுத்தலாம்.

இது வைரஸால் ஏற்படும் நோய் என்பதால் இதற்கென்று குறிப்பிட்ட மருந்துகள் ஏதுமில்லை. பொதுவாக 3 தொடக்கம் 5 நாட்களில் குழந்தை சாதாரண நிலைக்கு திரும்பிவிடும்.

குழந்தை அதிகமாக சாப்பிடாத இடத்தில் வைத்தியரின் உதவியை நாடுதல் நல்லது. மேலும் கடித்தல் தன்மை கூடுதலாக இருந்தால் அதற்கும் மருந்தை எடுக்கலாம்.

இந்த நோயை தடுக்கும் முறைகள்

★ இதற்கென்று எந்த விதமான தடுப்பு மருந்துகளும் இல்லை.

பொதுவான சுகாதார நிலைமைகளைப் பேணுவதன் மூலம் நோயை தவித்துக் கொள்ளலாம்.

★ ஒழுங்கான கை சுகாதாரத்தைப் பேணுதல்.

★ மலசல கூடத்தை உபயோகித்தபின் அல்லது குழந்தையின் மலசல தேவைகளை நிறைவேற்றிய பின் கைகளை நன்றாக சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்.

★ குழந்தைகளுக்கும் இவ்வாறான நல்ல சுகாதார பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல்.

★ இயலுமானவரை இந்த நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை மற்ற குழந்தைகளிடமிருந்து தனிமைப்படுத்தி வைத்தல்.

மு முன்பள்ளி செல்லும் சிறுவர்களை இந்த நோய் ஏற்பட்ட காலங்களில் வீட்டிலேயே வைத்து பராமரித்தல்.

சாராம்சமாக, இந்த HandFootMouth Disease ஆனது வைரஸால் ஏற்படும், ஒரு மிருதுவான, தானாகவே சுகப்படும் ஒரு நோயாகும். மிக மிக அரிதாகவே சிக்கல் நிலைமைகளை ஏற்படுத்தும்.

Dr. விஷ்ணு சிவபாதம்
MBBS, DCH, MD Paediatrics
குழந்தை நல வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை
மட்டக்களப்பு




# உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு பலா மரம் நடும் வேலைத்திட்டம்






(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு பட்டினி அற்ற-மரங்கள் நிறைந்த தார்மீக நாடொன்றைக் கட்டியெழுப்பும் சிறுவர் சுற்றாடல் பாதுகாப்பு படையனியைத் தாபித்தல் மற்றும் 100000 பலா மரங்களை நாட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதனின் ஆலோசனைக்கு அமைவாக மத்திய முகாம் பிரதேசத்தில் நேற்று பலா மரக்கன்றுகள் நாட்டப்பட்டது.

பாடசாலைகள், தபால் நிலையங்கள், மதஸ்தலங்கள், வங்கிகள் உட்பட பல இடங்களில் மரங்கள் நடப்பட்டது.இந் நிகழ்வில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காந்தியைப் பின்பற்றும் தலைவர்கள் தேவை



அரசியலிலே
ஒரு ஆன்மீக
வெளிச்சம்.
சமயம் கடந்த
மனித நேய
நடைமுறை.

போர், அழிவு,
பொய்மை,
வஞ்சகம் இல்லாது
புரிந்துணர்வைக்
கட்டியெழுப்பும்
புதிய பாதை.

அதுதான்,
வன்முறை அற்ற
வழிமுறை என்னும்
சாத்வீகம்.
அண்ணல்
காந்தியின்
அகிம்சை என்னும்
சத்தியாக் கிரகம்.
உண்மையோடு
நிற்றல்.

தேசம் தேசமாய்ச்
சிதறிக் கிடந்தது
இந்திய உபகண்டம்

அவற்றைச் சேர்த்
தெடுத்தவர்,
இந்திய தேசத்தைத்
தோற்று வித்தவர்,
காந்தி !

உணர்ச்சி
வயப்பட்ட
தீவிர வாதத்துக்கு
அனுமதி இல்லை.

தேசத்தின் பெய
ரால்,
விடுதலையின்
பெயரால்
மனித உயிர் போக்
கலும்
கொலையே !

இதற்கான எந்த
உரிமையும்
யாருக்கும் இல்லை.

மக்கள் உணர்வை
அறவழிப் படுத்தி
ஏகாதிபத்தியத்தை
இறங்கிவரச்
செய்தார்.

தன்னவர் கூட
அறநெறி
பிறழ்ந்தார்
தடுத்து நிறுத்திட
உணவு துறந்தார்.

சுதந்திரத்தின்
போது
பிரிவினை
நிகழ்ந்தது.

துக்கித்துப்
போனார்,
வெட்கம்
அடைந்தார்.

இந்துக்கள்
கொலைகளை
நிறுத்தினர்,
அடுத்துப்
பாகிஸ்தானுக்குப்
புறப்பட இருந்தார்.

அங்கு
போயிருந்தால்
இன்று வரைக்கும்
இந்திய -
பாகிஸ்தான்
உறவு இருந்தி
ருக்கும்.

தீவிரவாதம்
அதனைத் தின்றது.
துப்பாக்கி
வேட்டுகள்
காந்தியைக்
கொன்றன.

புரட்சிகள் கண்
டோம்
புரட்சியாளர்கள்
சர்வாதிகாரிகள்
ஆனதே சரித்திரம்.

அமெரிக்க, பிரெஞ்
சுப் புரட்சிகள்
மக்களை
அரவணைத்து
மலர்ச்சி கண்டதால்
மக்கள் ஆட்சியின்
மகிமை
அங்குண்டு.

அங்கும்
கொலைகள்,
கொள்ளைகள்
நிகழ்ந்தன.
காந்தீயத்தில்
இவையெல்லாம்
இல்லை.

காந்தியின்
கொள்கையைக்
கடைப் பிடித்
தொழுகினால்
உலகம் முழுவதும்
அமைதியில்
செழிக்கும்.

அதற்குக்
காந்தியின்
பிறப்புத் தேவை
யில்லை.
காந்தியைப்
பின்பற்றும்
தலைவர்கள்
தேவை.

(அண்ணாதாசன்)

# அரசியலுக்கு அப்பால் மக்களின் தேவை நிறைவு செய்யப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அரசியலுக்கு அப்பால் மக்களின் தேவை நிறைவு செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக முன்மொழியப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், இன்றைய காலகட்டம் தேசிய அரசியலில் சவால் மிக்க ஒரு காலகட்டமாக காணப்படுகின்றனர். நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ச அவர்கள் எதிர்வரும் காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மிக நுட்பமான முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து வருகிறார்.

கல்முனைப் பிராந்தியத்தை பொறுத்தளவில் இங்கு முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் பிராந்தியத்தின் நலனுக்காகவும் பொதுமக்களுக்குரியதாகவும் இருக்க வேண்டும். இங்கிருக்கும் அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மக்கள் பிரதிநிதிகளோடு இணைந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.



பொது மக்களின் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்ற போது, வேலைத்திட்டத்தை பூரணமாக நிறைவேற்றும் திட்டங்களா அமைய வேண்டும். அதேபோன்று அரச உத்தியோகத்தர்களும் அரசியல்வாதிகளும் இடைவெளிகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். இன்று பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எமது கல்முனை பிராந்திய ஆட்புல எல்லைக்குள் மக்களுக்கு பிரயோசனமான பணிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதை தேசிய அரசியல் மற்றும் பிராந்திய அரசியலில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டு முன் நோக்கி செல்கின்றோம். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எவ்வாறாயினும் அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமான விடயமாகும் என்று தெரிவித்தார்.

இதன் போது, பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 29 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஒரு பிரிவுக்கு 30 இலட்சம் ரூபா ஒதுக்கீடு என்ற அடிப்படையில் 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. இங்கு மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

இதில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ,பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, கணக்காளர் யூ.எல். ஜவாஹிர், திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். ஜவ்பர், சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் உட்பட திணைக்களத்தின் தலைவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# தம்பலகாமத்தில் தூக்கில் தோங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் தம்பலகாமம்-முள்ளியடி பகுதியைச் சேர்ந்த துரைராசா செல்வகுமார் (40) வயது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது- குறித்த நபர் மூன்று திருமணம் செய்துகொள்ள தாகவும் தற்போது மூன்றாவது மனைவியுடன் வாழ்ந்து வரும் நிலையில் இருவருக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டதாகவும் இதனையடுத்து அவர் தானாகவே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும் குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் கொண்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை குறித்த சடலத்தை பீசீஆர் பரிசோதனை செய்து அறிக்கை கிடைத்தவுடன் பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்க உள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவரது மரணம் தொடர்பில் விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்





(ஏறாவூர் நிருபர்)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையிட்டு ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வு இம்முறை மீராகேணி பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

சமூக சேவைக் உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி. நஜிமுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச உதவிச் செயலாளர் ஏசி. அஹமட் அப்கர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறுவர்கள் மற்றும் முதியோர்கள் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் பலா மரம் நடும் திட்டத்திற்கமைவாக பலாமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

மேலும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் முதியோர்களுக்கென வழங்கப்பட்ட முச்சக்கர பைசிக்கள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

# அம்பாரை மாவட்டத்தில் மக்களின் அன்றாட செயற்பாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது





(வி.சுகிர்தகுமார்)

42 நாட்களின் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீங்கியதை அடுத்து அம்பாரை மாவட்டத்தில் மக்களின் அன்றாட செயற்பாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

அக்கரைப்பற்று மத்திய போக்குவரத்து நிலையத்தில் இருந்து அரச மற்றும் தனியார் பஸ்களும் போக்குவரத்தில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

ஆயினும் மக்கள் போக்குவரத்து நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் காட்டாமல் இருந்ததையும் காண முடிந்தது.

இதேநேரம் அனைத்து வியாபார நிலையங்களும் திறந்திருந்ததையும் மக்கள் தமக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டியதையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் சந்தைப்பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன் மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வாகரை கட்டுமுறிவு கிராம மேம்பாட்டிற்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு





(ரக்ஸனா)

உற்பத்தி கிராமமாக தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை கட்டுமுறிவு கிராம மேம்பாட்டிற்க்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களின் நாட்டை கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலும் உற்பத்தி கிராமங்களை உருவாக்கி பல குடும்பங்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அதனடிப்படையில் வியாழக்கிழமை(30) கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கட்டுமுறிவு கிராம சேவகர் பிரிவானது ''உளுந்து கச்சான் மற்றும் கௌப்பி '' உற்பத்தி கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த உற்பத்தி கிராம மேம்பாட்டிற்க்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கட்டுமுறிவு கிராம சேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 60 பயனாளிகள் நேரடியாக உள்வாங்கப்பட்டு 40 பயனாளிகளுக்கு 82, 200 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் பம்பி மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள், 10 பயனாளிகளுக்கு தோல் நீக்கம் செய்யப்பட்ட உளுந்து பொதியிடுவதற்கான உபகரணங்கள் மேலும் 10 பயனாளிகளுக்கு உடைக்கப்பட்ட உளுந்து பொதியிடல் உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் நாங்கள் எதிர்பார்ப்பது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டு மாதம் 30,000 தொடக்கம் 50,000 வரையிலான வருமானம் பெறுவதனை உறுதிப்படுத்துவதாகும். இதற்கமைய இப்பயனாளிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும், நெறிப்படுத்துவதற்மென பிரதேச செயலாளர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்றோரை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றினை உருவாக்கப்பட்டுள்ளன.

இவ் உற்பத்தி கிராமத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் கச்சானை தொடர்ச்சியாக ஒரே விலையில் கொள்வனவு செய்வதற்கென Cylon Mun-chi Biscuit Company உடனான ஒப்பந்தத்தினை லங்கா வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ளன.

தொடர்ச்சியாக இது போன்ற ஊள்ளூர் கிராமிய பொருளாதாரத்தினை மேப்படுத்துதல் அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் நாங்கள் முழுமூச்சாக செயற்படுவோம் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. என இதன்போது கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.







# ஒரு வருட பூர்த்தியை எட்டிய சிறுவர் சிநேக மாநகரம்

துதிமோகன்



யுனிசெப் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பின் மூலம் மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் செரி நிறுவனம் ஆகியன இணைந்து மேற்கொள்ளப்பட்ட சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் சிநேக மாநகரம் செயற்திட்டமானது ஒரு வருடத்தைக் கடந்துள்ளது.

கடந்த வருடம் செரி நிறுவனத்தினர் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை சார்பில் மாநகர முதல்வர் தி.சரவணபவன் ஆகியோருக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சிறுவர்கள் தொடர்பில் அக்கறை கொண்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமும் சமூக அக்கறை கொண்டு செயற்படும் உள்ளூராட்சி நிறுவனமான மட்டக்களப்பு மாநகரசபையும் இணைந்து மாநகர எல்லைக்குட்பட்ட 20 வட்டரங்களையும் அடிப்படையாகக் கொண்டு சிறுவர் சிநேக மாநகரம் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது.

சிறுவர்களின் பாதுகாப்பு அவர்களின் சுதந்திரமான வாழ்வியல் முறைகள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகரமானது சிறுவர் சினேகபூர்வ மாநகரமாக மாற்றியமைக்கப்பட்டது. பல வளர்முக நாடுகளில் மேற்படி சிறுவர் சினேகபூர்வ மாநகரங்கள் அமையப்பெற்றிருந்தாலும், இலங்கையில் முதல்முறையாகவும் ஏனைய மாநகர சபைகளுக்கு எடுத்துக்காட்டாகவும் இத் திட்டம் அமையப்பெற்றது.

அத்துடன் மாநகருக்குள் வாழும் சிறுவர்களின் திறன் விருத்தி சிறுவர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் ஊடாக அவர்களை எதிர்காலத்தில் சமுகப் பொறுப்பு மிக்க நற்பிரஜைகளாக வளர்த்தெடுத்தல் மற்றும் மாநகருக்குள் வதியும் பெற்றோர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கத்தினை வெகுவாக அதிகரிப்பதன் மூலம் பெற்றோர் அதிக நேரத்தினை தமது பிள்ளைகளுடன் போக்குவதற்கான செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்றனவற்றிற்காக முதற்படியாக மாநகர பாலர் பாடசாலைகள், சிறுவர் பூங்காக்கள் போன்றவற்றினை மாற்றியமைப்பதற்கான திட்டங்களும் இதன்மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கொவிட் 19 சூழ்நிலைகளுக்குள்ளும் பல்வேறு செயற்திட்டங்கள், அழகுபடுத்தும் செயற்பாடுகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இச் செயற்பாடுகள் மட்டக்களப்பு மாநகரசபை, கல்வி, சுகாதாரத்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நகர மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த சுமார் 281 முக்கிய அதிகாரிகளைச் சென்றடைந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இத்திட்டத்தின் கீழ் பிள்ளைகளின் வளர்ச்சி தொடர்பான சமூக சேவைகள் உட்கட்டமைப்பு செயற்பாட்டில் 35 உட்கட்டமைப்பு செற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மருத்துவ சிகிச்சையகங்கள் தாய்ப்பாலூட்டும் வசதிகளோடும், விளையாட்டுப் பகுதி, விளையாட்டுப் பொருட்பெட்டி மற்றும் தாய் பிள்ளைகளுக்கு விழிப்பூட்டும் செய்திகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இதே விடிளாயட்டு அம்சங்களுடன் காந்தி பூங்கா, மிதி வண்டிப் பாதைகளுடன் கூடிய முதலாவது வளர் இளம் பருவத்தினருக்குரிய பூங்காவாக அமைக்கப்பட்டுள்ள லொயிட்ஸ் பூங்கா, வாவிக்கரைப் பூங்கா, மண்முனை வடக்குப் பிரதேச செயலக சிறுவர் விளையாட்டுப் பூங்கா, அரசாங்கத்துக்குச் சொந்தமான சிறுவர் பாதுகாப்பு இல்ல பூங்கா போன்றனவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மேலும், நகர அழகுபடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் பிரதான வீதியின் மையப்பகுதிகளில் பூமரங்கள் நாட்டுதல், வர்ணப்பூச்சு, சித்திரங்கள் மூலம் அழகுபடுத்தல், பாடசாலைகளுக்கருகில் சிறுவர் சிநேக பாதசாரிக் கடவைகள் போன்றனவும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறுவர் காடுகள், நகரைப் பசுமையாக்க மரங்கள் நடல் போன்ற செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.





இதேபோன்று மட்டக்களப்பு சிறுவர் நன்னடத்தைப் பிரிவு, மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பெண்கள் மற்றும் குழந்தைகள் பிரிவு, போன்றனவற்றில் சிறுவர் சிநேக பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் அரசாங்கத்துக்குச் சொந்தமான பாதுகாப்பான இல்லத்தில் உள்ள உட்புற நூலகத்தை வர்ணமயமாக்கி மேம்படுத்தும் செயற்திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 07 பாடசாலைகளில் வர்ண வடிவமைப்புகளுடன் கூடிய கல்விசார் செய்திகள் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் போசாக்கு குறைபாட்டுப் பிரச்சனைகளை ஒழிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட சமூக பண்ணை செயற்பாடுகளில் 50 வீதமான முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது.

அழகுபடுத்தல், புனரமைப்பு செயற்பாடுகளைப் போன்றே சமூக விழிப்புணர்வு மற்றும் கொவிட் 19 நிலைமைகளுடன் தொடர்புடைய செயற்திட்டங்களும் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 30 இடங்கள் தொரிவு செய்யப்பட்டு அங்கு கைகழுவும் பகுதிகள் நிறுவப்பட்டுள்ளன. அதே போன்று பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவினருடன் கடமையாற்றும் கொவிட் பணிக்குழுவினருக்கு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், சுமார் 555க்கும் மேற்பட்ட சிறுவர்கள், இளைஞர்களுக்கு அவர்களது வளர்ச்சிக்கு முக்கியமான பல்வேறு தலைப்புகளிலான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சிறுவர் நேய மாநகரம் செயற்திட்டம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து ஒருவருட காலத்திற்குள் இத்தனை அம்சங்களுடன் கூடிய பாரிய செயற்திட்டங்கள் நடைறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட அளவிடக் கூடிய நன்மைகள் மட்டுமல்லாது, பல அளவிடப்படமுடியாத நன்மைகளும் சிறுவர்களைச் சென்றடைந்துள்ளன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதி மற்றும் செரி நிறுவனத்தின் பாரிய ஒத்துழைப்புகள் இல்லாமல் மேற்படி செயற்திட்டங்கள் சாத்தியமாவது கடினமாகவே இருந்திருக்கும். அதே போன்று மட்டக்களப்பு மாசநகரசபை, அரச துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் போன்றனவற்றின் ஒத்துழைப்பினாலும் இம் முன்னேற்றகரமான செயற்பாடு செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டுரை தொடர்பான மேலதிக விபரங்களை காணொளி வடிவில் பார்க்க ஸ்கேன் செய்க







# சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு திராய்மடு பிரதேசத்தில் சிறுவர் மாதிரி தோட்டம் கையளிக்கப்பட்டது





(எஸ்.அமிர்தகழியான்

சர்வதேச சிறுவர்தினத்தினை முன்னிட்டு சிறுவர் மாதிரி தோட்டம் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் பங்குபற்றுதலுடம் நேற்று மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தில் இடம்பெற்றது.

2021 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பட்டினியற்ற மரங்கள் நிறைந்த தார்மீக நாடொன்றை கட்டியெழுப்பும் நோக்கில், அனைத்திலும் முன்னுரிமை சிறுவர்கள் எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் ஒரு இலட்சம் பலா மரக்கன்றுகளை நாடளாவிய ரீதியில் சிறுவர்கழக சிறார்கள் மூலம் நடப்பட்டு வருகின்றது. இதன்மூலம் சமூகத்திட்கு அவற்றின் பயனை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சின் ஏட்பாட்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகளை திணைக்கள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ. குகதாசன் ஒழுங்கமைப்பில் திராய்மடு பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாதிரி தோட்டம் சிறுவர்களால் பராமரித்து முன்னெடுக்கும் வகையில் கையளிக்கப்படும் நிகழ்வில் பிரதம அதிதிய அரசாங்க அதிபர் கருணாகரன் கலந்து கொண்டார்.

இதன்போது அரசாங்க அதிபர் கருணாகரன் சிறவர்களால் பராமரிக்கப்படும் மாதிரி தோட்டத்தினை கையளித்ததுடன் வைபவரீதியாக பலாமரம் ஒன்றையும் நட்டு வைத்தார். மேலும் மலரும் மொட்டுக்கள் சிறுவர்கழக உறுப்பினர்களுக்கான பலாபரக் கண்றுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பயன்தரும் பழமரக் கண்றுகளும் சிறுவர்களால் நடப்பட்டன.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலர் ஆ. நவேஸ்வரன், யுனிசெப் நிறுவன சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் அன்று லாசரஸ், செரி நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் தர்சன், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பீ.பீ.சீ.சீ நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழக சிறார்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் போராளிக்கு புலம்பெயர் அமைப்பினால் வாழ்வாதார உதவி

(அக்கரைப்பற்று செல்வி)



பல்வேறுபட்ட சமூக நலன் சார்ந்த வாழ்வாதார உதவிகளை தாயகம் முழுதும் வழங்கிவரும் புலம்பெயர் அமைப்பினால் முன்னாள் போராளி ஒருவருக்கு அவரது வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கண்ணகி கிராமத்தைச்சேர்ந்த 1999ம் ஆண்டு விடுதலைப்போராட்டத்தில் இணைந்து போராட்ட களத்தில் தனது வலது காலிலும் மார்பிலும் காயங்களுக்குட்பட்டு கூலித்தொழிலின் மூலம் ஜீவனோபாயம் நடத்திவரும் முன்னாள் போராளி ஒருவருக்கு அவரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புலம்பெயர் சமூகநல அமைப்பான 'மனிதநேயம்' அமைப்பினரால் முதற்கட்டமாக சிறுகடை அமைப்பதற்கான உதவி வழங்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக அதன் 2ம் கட்டமாக சிறுகடை தொழிலை மேம்படுத்தும் நோக்கில் இரு குளிர்சாதனப் பெட்டிகளும் வழங்கிவைக்கப்பட்டது. காய்கறிகளை பழுதுபடாமல் களஞ்சியப் படுத்தி பாதுகாக்கும் குளிரூட்டியொன்றும்(vegetable cooler) மென்பானங்களை களஞ்சியப்படுத்தி பாதுகாக்கும் குளிரூட்டியும் (bottle cooler) வழங்கி வைக்கப் பட்டது.

இறுதி யுத்தத்தின் பின்னராக வலது காலிலும் மார்பிலும் காயப்பட்டு தமது இயலாத காலோடு மற்றயவரின் உதவியின்றி குறித்த போராளி கடந்த 10 வருடங்களாக கூலித் தொழிலின் மூலம் தமது வாழ்வை பல இக்கட்டான சூழ்நிலையிலும் கடத்தி வந்துள்ளார். இந்நிலையில் அமெரிக்கா வாழ் 'மனிதநேய' அமைப்பினரால் இப்போராளிக்கு நிரந்தர வாழ்வாதாரத்தினை ஏற்படுத்தும் நோக்கில் சிறுகடை அமைத்துக்கொடுத்துள்ளதுடன் இவ் குளிரூட்டிகளையும் மேலதிகமாக வழங்கி வைத்துள்ளது.

இதன்போது ஆலையடிவேம்பு பிரதேசசபை உறுப்பினர் தட்சணாமூர்த்தி நவநீதராஜா போராளிக்கான குளிரூட்டி சாதனங்களை நேரில் சென்று வழங்கி வைத்தார்.

# பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்துங்கள் எதிர்காலம் மோசமான நிலையில் சென்று கோண்டு இருக்கின்றது





(பாறுக் ஷிஹான்)

சர்வேதச சிறுவர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்த சிறுவர் தின நிகழ்வு சுகாதார வழிமுறைக்கமைவாக செறிக்கல்முனை 6ஆம் கொளனி மிலேனியம் பாலர் பாடசாலை வளாகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வானது சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் மீராமுகையதீன் அஸ்ரப் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது முதலில் இறை வணக்கம் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பதில் பொறுப்பதிகாரியின் உரை இடம்பெற்றன.

சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் மீராமுகையதீன் அஸ்ரப் பிரதம விருந்தினராக உரை நிகழ்த்தும் போது

பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள்.தற்போது எதிர்காலம் மோசமான நிலையில் சென்று கொண்டு இருக்கின்றது.படிப்புகளில் சிறுவர்கள் கவனம் செலுத்துவதும் குறைவு.மது போதை மற்றும் தொலைபேசி பாவிப்பதில் சிறுவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.எனவே சிறுவயது முதல் எமது பிள்ளை செல்வங்களை பெற்றோர்களாகிய நாங்கள் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும்.சிறுவர்களுக்கு பெற்றோர்களாகிய நீங்கள் அடிக்க கூடாது.அவர்களை வேறு வழிமுறைகளில் வழிநடத்த முயல வேண்டும்.சிறுவர்களைஅடித்து துன்புறுத்துவது பாரதூரமான குற்றமாகும்.சிறுவர்களுக்கென அரசாங்கத்தினால் பாதுகாப்பு சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இதை விட ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர்களுக்கென பிரிவுகள் திறக்கப்பட்டுள்ளன.இதனூடாக சிறுவர்களுக்கு உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற முடியும் என குறிப்பிட்டார்.

பின்னர் நிகழ்வில் கலந்து கொண்ட பாலர் பாடசாலை மாணவர்களுக்கு உணவுகள் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சவளக்கடை பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஏ.எம். ஜவ்பர் சிறுவர் மற்றும் மகளீர் பிரிவு பொறுப்பதிகாரி ரேகா சார்ஜன்ட் ஜெயசுந்தர மற்றும் சொறிக்கல்முனை 3 கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.ஜெயப்பிரசன்னா உட்பட ஆசிரியர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னாரில் போலிசாரால் அன்பளிப்பு

( வாஸ் கூஞ்ஞ)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் தலைமையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆரய்சியின் பங்குபற்றுதலுடன் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊ.ஐ ஜெதிலகவினால் வெள்ளிக்கிழமை குறித்த கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் கீரி அன்பு சகோதரர் இல்லம் மற்றும் மன்னார் மெதடீஸ் சிறுவர் இல்லத்தில் உள்ள மாணவர்ளுக்கு மேற்படி கற்றல் உபகரணங்கள் அடங்கிய பரிசு பொருட்கள் கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடியில் சிறுவர் தின நிகழ்வு

(ந.குகதர்சன்)





நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் நாடு தழுவிய ரீதியில் பட்டினி அற்ற மரங்கள் நிறைந்த தார்மீக நாடு ஒன்றை கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்ச்சித்திட்டத்தில் சர்வதேச சிறுவர்தினம் கொண்டாடப் படுகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி எம்.எச்.சபூஸ் பேகத்தின் வழிகாட்டலில் சர்வதேச சிறுவர்தின நிகழ்வு இன்று (01.10.2021) வெள்ளிக்கிழமை அனைத்திற்கும் முன்னுரிமையான குழந்தைகள்; எனும் தொனிப்பொருளில் மாஞ்சோலை பதுரியாநகர் அல்மினா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

மாஞ்சோலை தாருல் இன்ஸா சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். உபைத் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களுக்கு பலா மர கன்றுகள் வழங்கப் பட்டதுடன் பாடசாலை வளகத்தில் அதிதிகள் மற்றும் மாணவர்களால் பலா மர கன்றுகளும் நடப்பட்டதுடன் பிரதேச பாடசாலைகள் அரசதிணைக்களங்களுக்கும் பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# மன்னாரில் விவசாய களப்பயணத்தில் பெருமிதம் கோண்டார் அரச அதிபர் ஸ்ரான்லி டிமேல்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் குழுவுடன் இணைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளருடன் கூடிய களப் பயணம் ஒன்று இடம்பெற்றது.

இவ் களப்பயணமானது வியாழக்கிழமை காலை 9.15 மணியளவில் மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் காரியாளயத்திலிருந்து ஆரம்பமானது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி, சௌபாக்கிய திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வலு ஊடுசாகுபடி இயந்திரங்களை விவசாயிகளுக்கு மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் அவர்களால் வழங்கப்பட்ட நிகழ்வும் இவ் கள பயணத்தின்போதும் இடம்பெற்றது.

அடுத்து வட்டக்கண்டல் விவசாய போதசிரியர் பகுதிக்குச் சென்ற இவ் குழுவினர் மன்னார் மாவட்டத்தில் முதன் முதலாக 0.25 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயி கே.ரமணனினால் மேற்கொள்ளப்பட்ட தினை செய்கையை பார்வையிட்டதுடன் அறுவடை விழாவும் இங்கு இடம்பெற்றது.

அடுத்ததாக ரி.அசோதரன் என்பவரால் சேதன முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வயலை இவ் குழுவினர் பார்வையிட்டதுடன் 5000 . %000 கி.கி. இடைப்பட்ட கூட்டெரு தயாரிப்பையும் பார்வையிடப் பட்டது.

இதனைத் தொடர்ந்து மாதோட்டம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட பகுதிக்குச் சென்ற இவ் குழுவினர் இப் பகுதியில் ஏ.சலமோன் துரம் என்பவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மஞ்சள் தோட்டத்தையும் இவ் குழுவினர் பார்வையிட்டனர்.

அடுத்து 2016 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் விநாயகமூர்த்தி என்ற விவசாயிக்கு இழைய வளர்ப்பு வாழைக்குட்டி வழங்கப்பட்ட போது தற்பொழுது இது ஆறாவது சந்ததியாக அவ் தோட்டத்தில் இருப்தையும்

அதன் வாழைக் குழையின் பருமன் மாறாமல் (25,40 கி.கி) இருப்பதையும் இவ் குழுவினர் பார்வையிட்டனர். அத்துடன் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தேனீர் வளர்ப்பையும் பார்வையிட்டதுடன் இவ் விவசாயி சிறந்த முறையில் இதன் உற்பத்தியை மேற்கொண்டு வருவதை கவனத்தில் எடுத்துக் கொண்டனர்.

மேலும் சௌபாக்கிய திட்டத்தில் 2021 இல் சிறந்த முறையில் உழுந்து செய்கையை மேற்கொண்டவர்களுக்கு சூரிய மின்கல வேலி அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் அவர்களால் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இறுதியாக இவ் குழுவினர் மன்னார் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தை பார்வையிட்டதுடன் மாவட்ட விதை நெல் தேவையினை பூர்த்தி செய்யும் உற்பத்தியையும் பார்வையிட்டதுடன்

கூட்டெரு தயாரிப்பு தொகுதி, நன்னீர் மீன் வளர்ப்பு தடாகம் என்பவற்றையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் இவ் குழுவின் சகிதம் சென்று பார்வையிட்டு அதில் பெருமையும் கொள்வதாகவும் தெரிவித்தார்.

**சிறுவர் தின சிறப்புக்கவிதை**

## ஐயோ நீதி இல்லையே.!

*கையளித்த சிறுவர் எங்கே!*
*கடத்தப்பட்ட முதியோர் எங்கே!*
*கொண்டுசென்ற உறவு எங்கே!*
*கூட்டிச்சென்ற இளைஞர் எங்கே!*

*காக்கிகளே சொல்லுங்கள்!*
*கண்ணீருக்கு என்ன பதில்!*
*கடவுள்களும் பார்கவில்லை!*
*கவலைகளும் தீரவில்லை!*

*வீதிகளில் அலைகிறோம்!*
*விதியை சொல்லி அழுகிறோம்!*
*பாதை எல்லாம் தேடினோம்!*
*பலன் எமக்கு கிடைக்கவில்லை!*

*உலகத்துக்கும் சொன்னோம்!*
*ஒவ்வொரு நாளும் அலைந்தோம்!*
*ஐ நாவுக்கும் அனுப்பினோம்!*
*ஐயோ நீதி இல்லையே!*

**அம்பிளாந்துறையூர் அரியம்**



# கோப்பாய்க் கோமகன் கு.வன்னியசிங்கம்

**வன்னியசிங்கம்** இல்லாதிருந்திருந்தால் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றிருக்கவும் மாட்டாது, இன்று உள்ள நிலைக்கு வளர்ந்திருக்கவும் மாட்டாது எனத் தந்தை செல்வா, திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள் அமரரானதைத் தொடந்து நடைபெற்ற இரங்கலுரையின் போது (1959 புரட்டாதி) குறிப்பிட்டார்.

அவசியம் கருதி தமிழர் அரசியலுக்கு அழைக்கப்பட்டவர் திரு குமாரசாமி வன்னியசிங்கம், சட்டத்தரணி அவர்கள். 194% பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. கோப்பாய்த் தொகுதி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு. தம்பியப்பா என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. வேட்புமனு இன்னும் தயாரிக்கப்படவில்லை. ஆதரவாளர்களின் மகிழ்ச்சிக்காக ஊர்வலத்திலே சென்ற தம்பியப்பா அவர்கள் மாரடைப்பால் இயங்கை எய்துகின்றார்.

உடனடியாகப் பொருத்தமான வேட்பாளர் ஒருவர் தேடப்பட்டார். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் பரிந்துரையில் ஒரு பெயர் வந்தது. கொழும்பிலே சட்டத்தரணியாகத் தொழில் செய்பவர் அவர். எஸ்.ஜே.வி. அவர்களின் இளவல்களில் (ஜுனியர்) ஒருவர். அவரது தந்தையார் குமாரசாமி, யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி தொழில் புரிபவர், சிறந்த தமிழ் அறிஞர். குமாரசாமி அவர்களின் தந்தையார் ஒரு பெயர் பெற்ற மருத்துவர், வன்னித்தம்பி அவர் பெயர்.

இளவல் வன்னியசிங்கம் அவர்கள் முப்பத்தாறு (36) வயது நிரம்பிய கலைப் பட்டதாரி மற்றும் சட்டத்தரணி. அதுவும், எஸ்.ஜே.வியின் இளவல், வேட்பாளர் உறுதிப்படுத்தப்படுகின்றார். இளவலின் மேடை முழக்கம் பார்வையாளர்களைப் பரவசப் படுத்துகின்றது. தலைவர்களை நிமிர்ந்து பார்க்கச் செய்கின்றது. தேர்தலின் போது வாக்குப் பெட்டி நிரம்புகின்றது. யாழ்ப்பாணமெங்கும் புகழ்கொடி கட்டிப் பறந்த 'இந்துபோட்' இராசரெத்தினம் அவர்கள் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றார். அப்போதுதான் அறிமுகமான இளைஞன் குமாரசாமி வன்னியசிங்கம் 4353 மேலதிக வாக்குகள் கொண்ட 9619 வாக்குகள் பெற்றுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகின்றார்.

பாராளுமன்றத்திலே சிங்களப் பெருந்தேசியவாதம் தனது உண்மை உருவத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்டிய காலம் அது. தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டாட்சியை (சமஷ்டி) வலியுறுத்தவில்லை. ஆனால், கு.வன்னியசிங்கம் அவர்களிடம் தமிழர்தம் அரசியல்வழி கூட்டாட்சியே என்ற உளக்கருத்து பதிந்திருந்தது.


எனவே தான், 28.11.1947 அன்று ஆளுநர் நாயகத்தின் உரை மீதான தனது கன்னி உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'கண்டிப் பிரதேச மக்கள் சமஷ்டி அரசியல் முறையைக் கேட்டால் இச்சபையில் எனது எதிர்ப்பக்கத்திலே இருக்கும் சில அங்கத்தவர்களுக்கு கேலிக்குரிய விடயமாக இருக்கும் போல் தோன்றுகின்றது. ஆனால், தமிழர்கள் சமஷ்டி அரசியற் திட்டம் கேட்டால் அவர்களுக்கு கோபத்தையும், கிண்டலையும் உண்டுபண்ணுவதாக அமைகின்றது. ஏன் அப்படியாக இருக்க வேண்டும் என எனக்கு விளங்கவில்லை'.

தமிழர் எதிர்ப்பு நிகழ்ச்சிநிரல் பாராளுமன்றத்தில் அரங்கேறத் தொடங்கியது. இலங்கை சுதந்திரமடைந்து 285 நாட்களே கடந்திருந்தன. 1948 ஆவணி 20ம் நாள் 1948ம் ஆண்டின் 18ம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டத்துக்கான சட்டமூலம் விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் காங்கிரசைச் சேர்ந்த எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமூலத்தை எதிர்த்து விவாதித்தார்கள்.

சட்டமூலம் வாக்கெடுப்புக்கு வந்தபோது தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்து வாக்களித்தனர். சுயேட்சையாகத் தேர்தலில் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையில் அமைச்சராயிருந்த சி.சுந்தரலிங்கம் அவர்களும் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்து விட்டு பதவியைத் துறந்து எதிர்க்கட்சி வரிசையில் இடம்பிடித்தார்.

இலங்கைப் பாராளுமன்ற நிலவரங்கள் பிரித்தானியாவில் எதிரொலித்தன. சுதந்திரம் வழங்கியபோது சிறுபான்மையினர் தமது உரிமை தொடர்பாக அச்சம் தெரிவித்தமை சரியே என்ற அபிப்பிராயம் எழுந்தது. ஆளுநர் நாயகம் சோல்பரி பிரபு கூட கிலேசமடைந்தார். சிங்களத் தலைவர்கள் தங்கள் ராஜதந்திரத்தைப் பயன்படுத்தினார்கள். சேர் ஒலிவர் குலதிலகா ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களை அணுகினார். உயர்ரக ஆங்கில உரையாடல். அபிவிருத்தி, தொழிற்சாலைகள் என்பவற்றால் ஜி.ஜி.பொன்னம்பலம் சிந்தனையில் மாற்றம் பெற்றார். குடியுரிமைச் சட்டத்தின் கடுமையைத் தணிப்பதற்கு வழிவகை காண்பதாகப் பரப்புரை செய்தார். அரசில் சேர்ந்தார். அவரோடு ரி.இராமலிங்கம், வி.குமாரசாமி என்போரும் சேர்ந்து கொண்டனர்.

இலங்கை – இந்தியத் தமிழர்களுக்கு எதிராய்



நடந்து கொள்ள மாட்டேன் என்று இலங்கை – இந்திய காங்கிரசுக்கு எழுத்தில் கொடுத்த வாக்குறுதியைப் புறந்தள்ளினார். கைத்தொழில், மீன்பிடி அமைச்சராகப் பதவி ஏற்றார் தமிழ் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், எஸ்.சிவபாலன், மூதவை உறுப்பினர் ஈ.எம்.வி.நாகநாதன் என்போர் மறு அணி ஆயினர்.

தொடர்ந்து 1949ம் ஆண்டின் 03ம் இலக்க இந்திய பாக்கிஸ்தானிய (வதிவோர்) குடியுரிமைச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தது. ஜி.ஜி. அணியினர் ஆதரித்துப் பேசினார்கள், ஆதரவாக வாக்களித்தார்கள். எஸ்.ஜே.வி அணி எதிர்த்துப் பேசி, எதிராக வாக்களித்தது.

இலங்கைத் தமிழர், என்ற கருத்துரு இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் என விரிவாக்கம் அடைந்தது. இலங்கைத் தமிழர், இலங்கை – இந்தியத் தமிழர் (பின் மலையகத் தமிழர்), இலங்கை முஸ்லீம்கள் (இலங்கை – இந்திய முஸ்லீம்கள்) பின்னர் முஸ்லீம்கள் எல்லோரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒருமைக்குள் அணி திரட்டப் பட்டனர். இலங்கையின் பெரும்பான்மை இனச் சிங்கள மக்கள் இந்த நாட்டுக்கு எத்தகு உரித்துக்களைக் கொண்டவர்களோ அதற்குச் சமமான உரித்துக்களை தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் கொண்டவர்கள். இந்;தச் சமத்துவத்தை பேணிப் பாதுகாக்க ஒரு அரசமைப்பு வேண்டும். அதுவே, ஐக்கிய இலங்கைக் கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பு என்னும் கருத்துருவாக்கம் ஏற்பட்டது. இதைத் தாங்கிச் செல்லும் அரசியல் இயக்கம் இலங்கைத் தமிழரசுக் கட்சி எனப் பெயர் சூடிக் கொண்டது.

புதுப் பொலிவோடு, புதுவகைக் கருத்துகளோடு தமிழரசு இயக்கம் வடக்கில் நடைபயிலத் தொடங்கியது. காங்கிரஸ் காரர்கள் சண்டித்தனம் செய்ய வெளிக்கிட்டனர். தமிழரசார் சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கு.வன்னியசிங்கம் அவர்கள் இதில் முன்நிலை வகுத்தார். மேடையிலே சில மெய்க்காப்பாளர்கள் நிற்க ஏற்பாடு செய்யப்பட்டது. வன்னியசிங்கம் அவர்களின் மக்கள் சுவைப் பேச்சுகள் களை கட்டின. தமிழின் செழுமை, தமிழனின் பாரம்பரியம், தமிழ் அரசியலின் தேவை, கூட்டாட்சியின் கொள்கைச் சிறப்பெல்லாம் மக்களை விழிப்படையச் செய்தன.

திருகோணமலையோடு நின்று விட்ட தமிழர் அரசியல் திருமலையைத் தாண்டி, கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, திருக்கோவில் எனப் பரவிப் பாய்ந்தது. 1949 மார்கழியில் பொழியத் தொடங்கிய தமிழரசு மழை 1951 வரை வடக்கு, கிழக்கு, வடமேற்குகளில் தமிழரசுப் பயிரை முளைக்க வைத்தது.

1951 சித்திரைத் திங்கள் 13, 14, 15ம் நாட்களில் தமிழர் தலைநகராம் 'கோயிலும், சுனையும் கடலுடன் சூழ்ந்த' திருகோணமலையிலே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு பூத்தது. சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள் தலைமையுரை வழங்கினார்.

பன்மைத் தன்மை உள்ளது இந்த நாடு இங்குள்ள அனைவரும் சமமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். இத்தன்மையைப் பேணி வளர்க்க இன்றிருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பு ஏற்புடையதல்ல. தனித்துவம் கொண்ட பிரதேசங்களை ஒன்றிணைத்த ஐக்கிய கூட்டாட்சி (சமஷ்டி) குடியரசே மிகவும் பொருத்தமானது. இதனை அடைவதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இலடட்சியப் பாதை என அவர் வெளிப்பகர்ந்தார்.

இந்நிலையிலே 1952ம் ஆண்டின் பொதுத் தேர்தல் வைகாசி மாதத்தில் நடந்தேறியது. பத்துத் தொகுதிகளில் தமிழிரசு வேட்பாளர்களை நிறுத்தியது. கோப்பாயில் திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள், திருகோணமலையில் என்.ஆர். இராஜவரோதயம் அவர்கள் ஆகிய இருவர் மட்டுடே வெற்றிவாகை சூடினர். இதனால் சோர்ந்துவிடவில்லை தமிழரசார்.

தென்னிலங்கையிலே சிங்களப் பேரினத்தின் எழுச்சி அலை, அலையாகப் பாய்ந்தது. இலங்கைத் தேசியம் மறைந்தது. சிங்களத் தேசியம் சிறகு விரித்தது. ஏழு இலட்சம் மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்ததும் தொடர்ந்து, அவர்தம் வாக்குரிமையை இலதாக்கியதும் இதனால், மலைத் தமிழரின் எட்டுப் பிரதிநிதிகளுக்குப் பாராளுமன்றக் கதவுகள் அடைக்கப்பட்டதும் சிங்களப் பேரினவாதத்தின் வயிற்றை நிரப்பவில்லை.

மாறாக, தமிழர் நிலங்களிலிருந்தும் சிங்களப் பிரதிநிதிகளை வரவைக்க வழிவகை கண்டது. கிழக்கிலே கல்லோயா, கந்தளாய், அல்லை, பதவியா போன்ற இடங்கள் அதன் கண்களிற்பட்டது. அரச உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் களை கட்டின.

குடியேற்றங்களால் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்கள் பறிபோவதையும், இதனால் சொந்த மண்ணிலே தமிழ் பேசும் இனம் இரண்டாம் தர மக்களாய் மாற்றப்படக்கூடிய ஆபத்தையும் தமிழரசார் வடக்கு கிழக்கெங்கணும் பரப்புரை செய்தார்கள்.

இந்நிலையில் 1955 சித்திரைத் திங்கள் 1%, 18ம் நாட்களிலே திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் மூன்றாவது மாநில மாநாடு நடைபெற்றது. கட்சியின் தலைமைப் பொறுப்பை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் கு.வன்னியசிங்கம் அவர்களிடம் கையளித்தார்.

கு.வன்னியசிங்கம் அவர்கள் தன் தலைமை உரையிலே, இலங்கைக் குடியுரிமைச் சட்டம், குடிவரவு – குடியகல்வுச் சட்டம் என்பவற்றால் மலையக மக்களின் மனித உரிமைகள் பந்தாடப்படும் பரிதாபத்தைக் கண்டித்தார். படைபலம் இல்லாமலே சுவிர்சர்லாந்து மனித உரிமை பேணும் மாண்புறு நாடாய் விளங்குவதை விபரித்தார். இத்தனைக்கும் அத்திவாரம் அந்நாட்டின் கூட்டாட்சி (சமஷஷ்டி) அமைப்பே என்பதைக் குன்றின் மேலிட்ட விளக்காய்க் கொளுத்தி வைத்தார்.

இதே வேளை சிங்களக் கட்சிகள் ஆட்சி பீட அலங்கரிப்பில் கண் வைத்தன. நாட்டின் பன்மைத்துவத்தை அலட்சியம் செய்தன. வாக்களரை வசீகரிக்க வழிவகை தேடின. மொழி வெறியை மக்கள் மத்தியிலே முறுக்கி விட்டன. 1955 மார்கழியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தன் மாநாட்டில் 'சிங்களமே ஆட்சி மொழி' எனத் தீர்மானம் நிறைவேற்றியது. இதற்குப் போட்டியாக 1956 தை 18ம் நாள் ஐக்கிய தேசியக் கட்சி தன் களனி மாநாட்டிலே இதே தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஒற்றையாட்சியில் ஒன்றிணைந்து வாழ்வோம் என்று போதனை செய்த சிங்களக் கட்சிகளின் தமிழ் உறுப்பினர்கள் விழி பிதுங்கினார்கள். தமது சமத்துவ உரைகள் செவிடன் செவியில் சங்கானதை உணர்ந்தார்கள். வெட்கத்தோடு வெளியேறினார்கள்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு திரு. கு.வன்னியசிங்கம் தலைமையிற் கூடியது. 19956 தை 20ம் நாள் வடக்கு கிழக்கில் கரிநாள் என வெளிப்பகர்வு செய்தது. தலைவர்களும், தொண்டர்களும் களத்தில் இறங்கினர். பேரினவாதக் கட்சிகளில் இருந்து வெளியேறிய தமிழ்த் தலைவர்களும் கைகோர்த்தனர். மலையகமும் மனமுவந்து முன்வந்தது.

கடைகள் அடைக்கப்பட்டன. பாடசாலைகளை மாணவர்கள் புறக்கணித்தார்கள். கடைத் தெருக்களிலும், வீதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன. வீதிகள் வெறிச்சோடின. தென்னிலங்;கை தமிழ் நிலத்தை எட்டிப் பாடத்தது. ஆட்சிக் கதிரையைப் பிடிக்க இதையே மூலதனமாக்க முடிவு கட்டின ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஒருபடி மேலே சென்றார். ஆட்சிபீடம் ஏறி அடுத்த இருபத்து நான்கு மணித்தியாலத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்றார். 1956 சித்திரையில் தேர்தல் திருவிழா. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பின்னே சிங்கள ஆசிரியர்கள், நாட்டு வைத்தியர்கள், மதகுருமார்கள் எல்லாம் அணிவகுத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மூக்கில் விரல் வைத்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமோக வெற்றியீட்டியது. வடக்கு கிழக்கில் பதினான்கு தொகுதிகளில் போட்டியிட்டு பத்தில் தமிழரசு வெற்றிக்கொடி நாட்டியது. தமிழ் பேசும் மக்கள் விழிப்படைந்தார்கள். 1956 சித்திரை 12ல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் நாட்டின் பிரதமரானார். மந்திரி சபையில் தமிழ் பேசுவோடர் இல்லாத குறையை நீக்க காடு கண்ணாவ பிரதிநிதி ?சிங்கள மரைக்கார்? என அழைக்கப்பட்ட ஏ.எஸ்.மரிக்கார் அவர்களை தபால், தந்தி, தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஆக்கினார்.

சிங்களம் மட்டும் சட்டம் தொடர்பில் நெருக்குவாரங்களுக்கு உள்ளானார். என்னதான் என்றாலும் அவரது மனச்சாட்சி அவரை உறுத்தியது. சட்டமா அதிபரை அழைத்து தமிழுக்கு நியாயமான உபயோகத்துக்கான ஏற்பாடுகளுடன் சிங்களம் மட்டும் சட்டத்தை வரையுமாறு கட்டளையிட்டார். செய்தி கசிந்தது. 'பாஷா பெரமுன' வின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் ஈ.ஆர். ஜயசூரிய பாராளுமன்றப் படிக்கட்டில் உண்ணாவிரதம் இருந்தார்.

'சிங்களமே இலங்கையில் ஒரே ஒரு உத்தியோக மொழி. உடனடியாக அமுல் செய்ய முடியாத இடங்களில் 1960 மார்கழி வரை ஆங்கிலப் பாவனைக்கு அமைச்சர் ஏற்பாடு செய்யலாம்' என இரு வசனங்களை மட்டும் கொண்ட ஆட்சி மொழி சட்டமூலம் தயாரானது. அது 1956 ஆனி 5ல் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட நிகழ்ச்சி நிரல் தயாரானது.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள், அநீதியான இச் சட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்க்கும் எனப் பிரதமருக்கு அறிவித்தார். இதன் அடையாளமாக அன்றைய தினம் தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தொண்டர்களும் பாராளுமன்றப் படிக்கட்டுகளில் இருந்து சத்தியாக் கிரகம் செய்யப் போவதாய்க் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த நாளில் எவருமே பாராளுமன்றப் படிக்கட்டுகளை அணுகாதபடி முட்கம்பி வேலி இடப்பட்டிருந்தது. பம்பலப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் இருந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் சத்தியாக்கிரக அணி ஊர்வலமாக நடந்து வந்தது. தலைவர்களும், தொண்டர்களுமான

15 ஆம் பக்கம் பார்க்க...

இருநுறு பேர்வரை அதிற் கலந்துகொண்டனர். அவ்வழியாகத்தான் பிரதமர் அவர்கள் தனது வாகனத்தில் பாராளுமன்றம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். கடமையில் நின்ற காவற்துறை அதிகாரி, அவர் பறங்கியர். பிரதமரை நிறுத்தினார். சத்தியாக்கிரகிகளைத் தாக்கும் ஆயுதத்துடன் காடையர்கள் காலிமுகத்திடல் கரையில் நிற்பதை அவர் பிரதமருக்கு அறிவித்தார். 'அவர்களை அடித்து விரட்டவா?' என்று கேட்டார். 'அந்த மருந்தை அவர்கள் கொஞ்சம் அருந்தட்டும்' என்ற பிரதமர் பயணத்தைத் தொடர்ந்தார்.

காலிமுகத்திடல் ஓரமாக சத்தியாக் கிரகிகள் அமைதியாகப் பயணித்துக் கொண்டிருந்தனர். காடையர்கள், அவர்கள் முன்நகராதபடி தடுத்தனர். சத்தியாக்கிரகிகள் காலிமுகத்திடலுக்குள் நுழைந்து தரையில் அமர்ந்தனர். கு.வன்னியசிங்கம் அவர்கள் 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்ற தேவாரத்தை உரத்துப் படித்தார். ஏனையோர் அதனைத் திருபபிச் சொல்லினர்.

காடையர்களிடையே நிமல் கருணாதிலக மற்றும் கே.எம்.பி.ராஜரெட்ண ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நின்றார்கள். அவர்கள் காடையர்கட்கு சத்தியாக்கிரகிகளை அடையாளம் காட்டினார்கள். பாய்ந்துவந்த காடையர்கள் முதலிலே கு.வன்னியசிங்கம் அவர்களைத் தாக்கினார்கள். ஈ.எம்.வி.நாகநாதன், வி.என்.நவரத்தினம், செ.இராசதுரை ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டார்கள். எஸ்.ஜே.வியைத் தாக்கவில்லை. ஆனால் அவரது பதினான்கு வயது மகன் மனோகரனைப் பாடாய்ப் படுத்தினார்கள். தொண்டர் செல்லையாவின் காதை ஒருவன் கடித்துத் துப்பினான். தொண்டர் ஒருவரின் குடுமியைப் பிடித்த ஒருவன் கொண்டைக் குத்தி குத்தியதால் பாடாய்ப் பதறினான். ஆபாசமாக நடந்து கொண்டார்கள். சிலர் சிறுநீர் கழித்து சத்தியாக்கிரகிகள் மீது தெளித்தார்கள்.

பாராளுமன்ற உப்பரிகையில் நின்று பண்டாரநாயக்கா பார்த்து மகிழ்ந்தாராம். இயற்கைக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை பெருமழையாய்ப் பெய்து தீர்த்தது. காடையர்கள் கலைந்தனர். பின்னர் சத்தியாக்கிரகிகள் கலைந்து சென்றனர். தலைவர்கள் பாராளுமன்றம் சென்றனர். கு.வன்னியசிங்கம் அவர்கள் தனது கருத்துக்களைக் கடுந்தொனியில் முன்வைத்தார்.

சத்தியாக்கிரகிகளைத் தாக்கிப் பயன் என்ன? தமிழர் கடைகளைப் புறக்கணியுங்கள் என்றார் ஆனந்தா கல்லூரி அதிபர் கல்விமான் மேத்தானந்தா. அதன் கருத்தை விளங்கிக் கொண்டார்கள் காடையர்கள். தமிழர்களின் கடைகள் கொழும்பிலே தீக்கிரையாக்கப்பட்டன, கொள்ளையடிக்கப்பட்டன, தமிழர்கள் தாக்கப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர்.

கிழக்கில் ஏழை விவசாயிகள் என்று கல்லோயாவில் குடியேற்றப்பட்டவர்கள் தமது சுய உருவத்தைக் காட்டினர். அங்கு குடியேறியிருந்த தமிழ் பேசும் மக்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். 1958 ஆனி 15ல் சிங்களம் மட்டும் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி (66க்கு 29 – 67 வாக்குகள் தேவை) பாராளுமன்றத்தில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது.

இதனிடையே கலவரம் நடைபெற்ற காலத்தில் திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள் மட்டக்களப்புக்கு விரைந்தார். மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு.செ.இராசதுரை அவர்களை அழைத்துக்கொண்டு கல்லோயா சென்றார். இவர்கள் பாதுகாப்பின்றி வருவதைக் கண்டு உதவிப் பொலிஸ்மா அதிபர் திரு. சிட்னி டி சொய்சா அதிர்ந்து போனார். அவரையும் அழைத்துக்கொண்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை சென்றார்கள். அங்கிருந்த கல்லோயா அகதிகளுக்கு ஆறுதல் சொன்னார்கள். ஆவன செய்தார்கள்.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதேவேளை தமிழர்கள் மீது இனவெறித் தாக்குதல் நடைபெற்றது. உரிமை தொடர்பில் மூச்சுவிடக் கூடாது என்னும் எச்சரிக்கை போல் இவையெல்லாம் அமைந்தன.

இதன் ஆபத்தை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்தார்கள். மக்கள் எழுச்சி பெற வேண்டும், அரசு எமது பக்க நியாயம் அறிந்து எமக்குச் சம உரிமை வழங்க வேண்டும், இதற்காக உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும். வி.நவரெத்தினம் அவர்கள் ஒரு திட்டம் வரைந்தார். எஸ்.ஜே.வியை அணுகி அதனை விளக்கினார். இது மக்களை ஆபத்தில் தள்ளி விடுவதாய் அமையலாம் என அவர் சம்மதம் தர மறுத்தார். வி.நவரெத்தினம் கு.வன்னியசிங்கத்தை அணுகினார், விளக்கினார், எஸ்.ஜே.வியின் தயக்கத்தை எடுத்துரைத்தார்.

வன்னியர் எஸ்.ஜே.வியை அணுகினார். மிகவும் பாதுகாப்பாக இதனைச் செய்ய முடியும் என்று துணிவு கூறினார். அனுமதி கிடைத்தது. 1956 ஆவணி 05ல் திருமலை யாத்திரை தொடங்கியது. கிழக்கில் திருகோவிலில் இருந்தும்,



வடக்கில் பருத்தித்துறை, மன்னார் போன்ற இடங்களிலிருந்தும் மக்கள் திருமலை நோக்கி நடைபவனி மேற்கொண்டனர். தலைவர்கள் தலைமை தாங்கினர்.

மொழி உணர்வு கொண்ட மக்கள் உணர்ச்சி வாக்கியங்களை முழங்கியபடி பத்து நாட்கள் நடந்தார்கள். 1956 ஆவணி 16ல் முப்பதாயிரம் மக்கள் திருமலை முற்றவெளியில் ஒன்று கலந்தார்கள். 17, 18, 19ம் நாட்களில் தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநில மாநாடு மிக எழுச்சியோடு நடைபெற்றது. திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள் மாநாட்டின் தலைவராய், கட்சியின் தலைவராய் மீண்டும் பொறுப்பேற்றார்.

தனது தலைமையுரையிலே திருமலையின் தமிழ்ப் பாரம்பரியத்தை வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கிக் கூறினார். சிங்களம் மட்டும் சட்டத்தால் நாடு அடையவிருக்கும் கேடுகளை வரிசைப்படுத்தினார். காலி முகத்திடல் அறப் போராட்டத்தை இந்திய ஏடுகள் மெச்சியமையை எடுத்துரைத்தார். விவசாய அபிவிருத்திக்காக வழங்கப்படும் 'கொழும்புத் திட்ட நிதியை' சிங்களக் குடியேற்றத்துக்குப் பயன்படுத்துவதைக் கண்டித்தார்.

பதிவுப் பிரஜைகளுக்கு நான்கு உறுப்பினர்கள் வழங்குவதாகக் கூறி இன்னும் நடைமுறைப்படுத்தாமையை வெளிச்சம் போட்டுக் காட்டினார். தமிழ் பேசும் மக்கள் மீது பேரினவாதிகள் பயன்படுத்தும் தந்திரம் 'பிரித்தாளும் தந்தரமல்ல, பிரித்தழிக்கும் தந்திரம்' என எச்சரிக்கை செய்தார். முஸ்லீம்களுக்குச் சலுகைகளை வழங்கி சிங்களம் கற்கத் துண்டுகின்றார்கள். இந்தப் பொறியில் அகப்;பட்டால் நாளை மதத்தைப் பயன்படுத்தி உங்களை அழிப்பார்கள் என்ற தீர்க்கதரிசனம் கூறினார்.

நேரடி நடவடிக்கை தொடர்பில் சிலர் அவசரப்படுத்தினர். சாத்வீகப் போராட்டம் தொடங்கும் முன் சுமூகமான முறையில் எமது கோரிக்கையை மறுதரப்பினர் ஏற்றுக்கொள்ள போதிய கால அவகாசம் வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். எனவே, 195% ஆவணி 20க்கு முன் இணைப்பாட்சி ஒன்றியம் அமையாவிட்டால் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என வெளிப்பகர்வு செய்தார்.

இம் மாநாட்டில் 'ஒரு சுயாட்சித் தமிழரசு' என்றிருந்த தீர்மானம் 'ஒரு சுயாட்சித் தமிழரசும், ஒரு சுயாட்சி முஸ்லீம் அரசும்' என்று முஸ்லீம்களின் வேண்டுகோளை ஏற்று வெளிப்பகர்வு செய்யப்பட்டது.

அரசோ, தனது ஆணவ நடவடிக்கைகளில் இன்னொரு கவடு எட்டி வைத்தது. வாகன இலக்கத் தகடுகளில் ஏற்கனவே இருந்த ஆங்கில எழுத்துக்களை நீக்கி சிங்கள 'ஸ்ரீ' எழுத்தைப் பொறிப்பதாகச் சட்டம் இயற்றியது. இதனால் எழுந்ததே ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம். அரசு சிங்கள ஸ்ரீ இட்டு அனுப்பிய வாகனங்களுக்கு தமிழரசார் தமிழ் 'ஸ்ரீ' யைப் பொறித்தனர். அரசு கண்டும் காணாமலும் இருந்தது.

பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசோடு பேச விரும்பினார். தனது நண்பர்கள், இராணி வழக்குரைஞர் பி.நவரத்தினராசா மற்றும் ஏ.சி.நடராசா ஆகியோரை எஸ்.ஜே.வியிடம் தூது அனுப்பினார். தமிழரசார் பேச இணங்கினர். 1957 ஆனி 22ல் பிரதமரின் கொறகொல்ல இல்லத்தில் முதற் சந்திப்பு இடம்பெற்றது. கூட்டாட்சி தொடர்பான வரைபை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டார், பிரதமர்.

கு.வன்னியசிங்கம், வி.நவரெத்தினம், ஈ..எம்.வி.நாகநாதன், சட்டக் கல்லூரி அதிபர் பிரிட்டோ முத்துநாயகம், சட்ட விற்பனர் ஏ.ஜே. வில்சன் என்போர் எஸ்.ஜே.வியுடன் இணைந்து செயற்பட்டார்கள். இரண்டு மூன்று சந்திப்புகள் அடுத்தடுத்து நிகழ்ந்தன. இரு பக்கத்தினரதும் நெருக்குவாரங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. 195% ஆடி 26ல் பண்டா – செல்வா ஒப்பந்தத்தில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாடு (5வது மாநாடு) 1957 ஆடி 27, 28ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெற இருந்தது. 26ம் திகதி இரவிரவாக மத்திய குழுக் கூட்டத்தில் பண்டா – செல்வா ஒப்பந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டன. திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சித்தார். வி.நவரெத்தினமும், எஸ்.ஜே.வியும் அவரை சமாதானப்படுத்த முயன்றார்கள், இறுதியில் கு.வன்னியசிங்கம் அவர்கள் கடுந்தொனியில் சில விளக்கங்களை முன்வைத்தார். அமிர் அடங்கினார். தலைமையின் கட்டளையை ஏற்றார். இரவிரவாக ஒப்பந்தத்தை மீண்டும் படித்தார்.

மறுநாள் மாநாடு தொடங்குவதற்கு முன்னதாக காலை வேளையிலேயே சி.சுந்தரலிங்கம் அவர்கள் மட்டுநகர் வந்திருந்தார். மாநாட்டு அரங்குக்கு அண்மித்ததாக மாநகரசபையின் முன்பாக நின்றார். பலர் அவரைச் சுற்றி நின்றார்கள். தமிழரசார் மலையைக் கல்லி எலியைப் பிடித்திருக்கின்றார்கள் என ஒப்பந்தத்தைக் கிண்டல் செய்தார். தமிழரசு வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் சிலர் அவ்விடம் வந்தனர். அடங்காத் தமிழருடன் விவாதித்தனர். அடங்காத் தமிழர் அடங்கிப் போனார். இடத்தை விட்டு அகன்றார்.

மாநாடு தொடங்கியது. முதற் பேச்சாளராக அ.அமிர்தலிங்கம் அவர்களே தோன்றினார். தலைவர்கள் கொடுத்த விளக்கங்களின் அடிப்படையில் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை விளக்கினார். அவையினர் கரவொலி எழுப்பினர், தலைவர்கள் பார்வையால் வாழ்த்தினர்.

தலைவர் கு.வன்னியசிங்கம் அவர்கள் பேசினார். 'சுயாட்சித் தமிழரசுக்கான அத்திவாரத்தை இட்டுள்ளோம். படிப்படியாக எமது உரிமைகளை ஒவ்வொன்றாக வென்றெடுப்போம்' என்றார். 195' ஆடி 28ல் மாநாட்டுத் தீர்மானங்கள் வெளிப்பகரப்பட்டன. 1) இலங்கை கூட்டாட்சி (சமஷ்டி) அரசியலமைப்பின் கீழ் தன்னாதிக்கமுள்ள சுதந்திரத் தமிழ் அரசு அல்லது அரசுகளை அமைத்தல். 2) 'தமிழ்' தேசிய சிறுபான்மையினரின் மொழி என்பதற்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தைப் பெறுதல். 3) முன்மொழியப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் மாவட்ட சுயாட்சியைப் பெறுதல். 4) குடியுரிமை மறுக்கப்பட்ட சகலருக்கும் குடியுரிமையைப் பெற்றுக் கொடுத்தல்.

மாநாடு முடிந்த கையோடு தெற்கிலும், வடக்கு – கிழக்கிலும் எதிர்ப்பலைகள் கிளம்பத் தொடங்கின. வடக்கு கிழக்கில் சி.சுந்தரலிங்கமும், ஜி.ஜி.பொன்னம்பலமும் தமிழர் உரிமையைத் தமிழரசு விற்றுவிட்டதாக முழங்கினர். தெற்கில், ஐக்கிய தேசியக் கட்சி இவ் ஒப்பந்தம் 'தமிழர்களின் முதலாவது சுவடு, அடுத்த சுவடோடு தமிழர் முழு இலங்கையையும் பிடித்து விடுவர்' என்று பரப்புரை செய்தனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தன கண்டி தலதா மாளிகை நோக்கி எதிர்ப்புப் பாதயாத்திரை தொடங்கினார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எஸ்.டி.பண்டாரநாயக்கா, இம்புல்கொடவுக்கு அப்பால் இப்பாதயாத்திரை தொடர முடியாதபடி தடுத்தார். ஜே.ஆர். வேறு பக்கமாக வாகனங்களில் செல்ல நேரிட்டது.

தென்னிலங்கையில் பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான பிரசாரங்கள் களைகட்டின. பண்டா வேறு வழியில்லாது 'ஸ்ரீ'யை மீண்டும் கையில் எடுத்தார். வடக்கு கிழக்கில் தமிழரசு ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை மீண்டும் தொடங்கியது. கு.வன்னியசிங்கம் அவர்கள் அனைத்துத் தமிழ் மாவட்டங்களுக்கும் சென்று ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

தலைவர்கள், வாலிப முன்னணியினர், மகளிர் அணியினர் எனப் பலரும் கைது செய்யப்பட்டனர். இரண்டு வார சிறைத் தண்டனை அனுபவித்தனர். மகளிருக்கு நீதிமன்றம் கலையும் வரை நீதிமன்றத்திலே மறியல் தண்டனை வழங்கப்பட்டது. கொழும்பு ஸ்ரீ இலக்க வாகனங்களைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது.

1958 வைகாசி 23, 24, 25ம் நாட்களில் தமிழரசின் ஆறாவது மாநில மாநாடு வவுனியாவில் நடைபெற்றது. கு.வன்னியசிங்கம் தனது தலைமைப் பொறுப்பை திருமலை பா.உ. திரு.என். ஆர்.இராஜவரோதயம் அவர்களிடம் கையளித்தார். மாநாட்டுக்கென மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட தொடரூந்தில் புறப்பட்ட தொண்டர்களைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. பொலநறுவையில் ஏற்பாடுகள் தயாராக இருந்தன. செய்தி கசிந்ததால் தொண்டர்கள் வெலிகந்தையிலேயே இறக்கப்பட்டு தலைவர்களால் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டனர்.

ஏமாற்றமடைந்த கலகக்காரர்கள் கதுருவல, கிங்குறாங்கொட பகுதிகளில் இருந்த தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்தனர். தென்னிலங்கை எங்கும் கலகம் பரவியது. தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு வடக்கு கிழக்குக்கு கப்பல்களில் அனுப்பப்பட்டனர். தமிழரசுக் கட்சி தடைசெய்யப்பட்டது. ஒப்புக்கு கே.எம்.பி.ராஜரட்ணவின் இயக்கமும் தடைசெய்யப்பட்டது. 1958 ஆனி 05ல் தமிழரசுத் தலைவர்கள் முக்கிய இரண்டாம் மட்டத் தலைவர்கள் என்போர் கைது செய்யப்பட்டனர். கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு கறுவாக்காடு 'ஸ்டான்மோர் கிறசென்'ல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். சுதந்திரன் பத்திரிகையும் தடை செய்யப்பட்டது. மூன்ற மாதங்களின் பின் காராக்கிரகத்தின் கதவுகள் திறந்தன. தலைவர்கள் விடுதலையானார்கள்.

மேற்குறித்த எல்லா நிகழ்வுகளிலும் திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள் இரவு, பகல் பாராது உழைத்தார். 1957 மார்கழி பெருவெள்ளம் மட்டக்களப்பைத் தாக்கியது. வெள்ளம் வடியும் வரை வடக்கிலே நிவாரணப் பொருட்களைச் சேகரித்தார். வெள்ளம் வடிந்த கையோடு மட்டக்களப்புக்கு வந்தார். நடக்க முடியாதபடி அவரது கால் வாதத்தால் வீங்கியிருந்தது. அவரது நிலை கண்டு மட்டக்களப்பு பா.உ செ.இராசதுரை கண்கலங்கினார். ஆனால், தலைவரின் தியாகம் கண்டு பெருமிதம் கொண்டார்.

தமிழ் மக்களைக் குடியேற்றுவதற்காக கல்லோயா, கந்தளாய், கிளிநொச்சி, அக்கராயன்குளம், முத்தையன்கட்டு போன்ற இடங்களுக்கு அடுத்தடுத்து பயணம் செய்தார். குடியேறும்படி தமிழ் மக்களைத் தூண்டினார்.

தீண்டாமையை ஒழிப்பதற்காக ஆலயப் பிரவேசம், சமபந்தி போசனம், உணவு விடுதிகளில் சமபந்தி போசனம் என்னும் செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டார். இதற்கு மேலதிகமாக திருமலை பா.உ என்.ஆர்.இராஜவரோதயம் அவர்களுடன் சேர்ந்து 195%ம் ஆண்டு 21ம் இலக்க சமூகக் குறைபாடுகள் தடுப்புச் சட்டத்தை தனியார் சட்டமூலமாக அறிமுகப்படுத்தி சட்டமாக நிறைவேற்றச் செய்தார்.

மலையக மக்களும் எமது உடன்பிறப்புகளே என்ற எண்ணம் அவரது குருதியோடு குழைந்த குணம். இதனால், வசதி குறைந்த திறமையான மலையக மாணவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்தார். சிறந்த பாடசாலைகளில் இடம் எடுத்துக் கொடுத்துக் கற்றலுக்கான மற்றைய வசதிகளையும் செய்து கொடுத்தார்.

அவரது வீடு ஒரு சத்திரமமாகவே காட்சியளிக்கும். செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காத்திருப்பார். இவ்விடயத்தில் அவரது துணைவியார் கோமதி வன்னியசிங்கம் அவரின் பணியைத் தன்பணியாக ஏற்றிருந்தார்.

கடுமுழைப்பால் அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தது. இரத்த அழுத்தம், வாதம் என்பன அவரை வாட்டின. அவரைப் பரிசோதித்த அவர் நண்பர் மருத்துவர் ஈ.எம்.வி.நாகநாதன் பா.உ அவர்கள் கட்டாயமாக ஆறுமாத ஓய்வு அவசியம் என வற்புறுத்தினார்.

அது என்னால் எப்படி முடியும். செய்த வேலைகளோ சொற்பம், செய்யவுள்ள வேலைகளோ மிக அதிகம். எமது பொறுப்புகளைப் பொருத்தமான இளைஞர்கள் கையில் கொடுக்கும்வரை நீங்களும், நானும் எப்படி ஓய்வெடுப்பது என்று கேட்டார்.

அரசியல்வாதி ஆனபின் பன்னிரண்டு ஆண்டுகள் தான் அவரால் தமிழ் மக்களுக்காக உழைக்க முடிந்தது. அந்தக் காலம் முழுக்க கடுமையாக தமிழ் மக்களுக்காகவே உழைத்தார். மிக எளிமையான உடையே அணிவார். எந்தவித டாம்பீகங்களும் கிடையாது. அவசியம் கருதி மட்டும் கோயில்களுக்குச் செல்வார். மற்றைய நேரமெல்லாம் மக்கள் பணியே.

விவசாயிகளோடும், தொழிலாளரோடும் மிக மிக நெருங்கிப் பழகினார். அரசியலுக்கு வந்த பின் கொடுத்ததை வாங்கிக் கொண்டு சட்டத்தரணி தொழிலைச் செய்தாரேயன்றி கட்டணமென்று கேட்டு அறவிடுவதில்லை. தலைமைப் பொறுப்பு தலையில் ஏற்றப்பட்ட பின் சட்டத் தொழிலை முற்றாகக் கைவிட்டார்.

இயற்கை அவருக்காக வருந்தியது. அவருக்கு ஓய்வளித்துத் தன்னோடு அரவணைக்க நினைத்தது. 1959 புரட்டாதி 1%ல் அந்தக் கைங்கரியத்தைச் செய்தது. தியாக மாமலை கு.வன்னியசிங்கம் புகழ் உடம்பில் புகுந்தார். அவர் உருவாக்கி வளர்த்துவிட்ட நீர்வேலி வாழைக்குலைச் சங்கம் நன்றி உணர்வோடு அவரது நூற்றாண்டு நினைவாக சங்கம் தனது நன்றியை வெளிக்காட்ட விரும்பியது. கட்டிட முன்றலில் 22.12.2021 அன்று அவரின் சிலையை நிறுவி நன்றி செலுத்தியது. அவர் ஈழத் தமிழர்தம் உணர்வோடு வாழ்கின்றார். அவர் புகழ் வாழ்கவே.



கி.துரைராசசிங்கம்,
சட்டத்தரணி,
முன்னாள் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

# கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் 5ம் திகதி வரை விளக்கமறியல்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

மஸ்கெலியா பிளான்டேசன் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில் தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 5ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 28ம் திகதி கட்டுக்கலை தோட்டத்தில் தொழிலாளர்கள் சிலருக்கும் அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது.

இச்சம்பவத்தில் தோட்ட தொழிலாளர்கள் சிலரால் தாக்கப்பட்டதாகக் கூறி அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவர் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் இரு பெண் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக கூறி அவர்களும் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 9 சந்தேக நபர்களை (தொழிலாளர்களை) தலவாக்கலை பொலிஸார் கைது செய்து 1.10.2021 நேற்றைய தினம் ஆஜர்படுத்தியபோது நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக கூறி லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த இரண்டு பெண் தொழிலாளர்களும் இன்றைய தினம் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியபோது அவர்களையும் எதிர்வரும் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# திரு அருட்பிரகாச வள்ளலார் 199 வது வருவிக்கவுற்ற திருநாள் 05.10. 2021 செவ்வாய்கிழமை

## 1000 பேருக்கான அன்னமளிக்கும் நிகழ்வு

திருவருட்பிரகாச வள்ளலார் பெருமானின் 199வது வருவிக்கவுற்ற திருநாளை முன்னிட்டு பிரான்ஸ் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1000 பேருக்கு அன்னமளிக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளனர்.

பசிப்பிணி அகற்றும் நோக்குடன் அம்பாறை மாவட்டம் பாணமைக் கிராமத்தில் 300 பேருக்கும், மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் 300 பேருக்கும், மன்னார் மாவட்டம் மடுப்பகுதியில் 200 பேருக்கும், திருகோணமலை மாவட்டம் கன்னியாவில் 200 பேருக்கும் இனமத பேதமின்றி 05102021 செவ்வாய்க்கிழமை அன்று அன்னமளிக்கும் நிகழ்வு இடம் பெறும்.

வம்மின் உலகியலீர் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்! புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்! பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே!

**சன்மார்க்க பணியில்.சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் பிரான்ஸ்**



# கல்முனையில் பயணத்தடை தளர்த்தப்பட்டதை அடுத்து பொதுமக்கள் இயல்பு வாழ்கை வழமைக்கு



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டிருந்த கொவிட் ஊரடங்கு சட்டம் நேற்று தளர்தப்பட்டதை அடுத்து பொதுமக்களின் இயல்பு வாழ்கை வழமைக்கு திரும்பியது.



கல்முனை, கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை நாவிதன் வெளி போன்ற பிரதேசங்களில் அத்தியவசிய பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு சுகாதார விதிமுறைகளுக்கு அமைய வியாபார நடவடிக்கைகள் நடைபெற்றன. அரச மற்றும் தனியார் வங்கிகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன் அரச அலுவலகங்களும் திறக்கப்பட்டு பொதுமக்கள் சேவைகள் நடைபெற்றன.

நீண்ட நாட்களுக்கு பிறகு வீட்டை விட்டு வெளியேறிய மக்கள் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு நீண்ட வரிசையில் அலுவலகங்களில் காத்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஒன்றிணைந்து விசேட கண்காணிப்பு பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த போக்குவரத்து மற்றும் ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் சுகாதார தரப்பினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

# மூதூர் பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு



**திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்**

முஸ்லிம் எயிட் நிறுவணத்தினால் மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் முஸ்லிம் எயிட் நிறுவணத்தினால் 200 குடிநீர் இணைப்பு திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 49 குடும்பங்களுக்கான நீர் இணைப்பிடிக்கு பணம் செலுத்திய மத்திப்பீட்டு துண்டுகள் மூதூர் பிரதேச செயலகத்தில் கையாளிக்கப்பட்டது

இந்நிகழவில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்,பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் சிறுவர் தின நிகழ்வும் மரக்கன்றுகள் வழங்கி வைப்பும்





**மாளிகைக்காடு நிருபர்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'அனைத்திற்கும் முன்னுரிமை சிறுவர்கள்' என்ற தொனிப்பொருளில் சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.

அதனையொட்டியதாக தேசிய நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் பலாக்கன்றுகள் நடும் வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனினால் பயனாளிகளுக்கு பலாக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது .

இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல்பணிப்பாளர் ட.மோகனகுமார், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.எம். அச்சி முஹம்மட், மற்றும் சிறுவர் பெண்கள் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது சிறுவர் நல உத்தியோகத்தர் ஏ.ஆர்.எம். இம்தியாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பெரிய நீலாவணையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு





**ஏ.எல்.எம்.ஷினாஸ்**

'பட்டினி அற்ற மரங்கள் நிறைந்த தார்மீக நாடொன்றை கட்டியெழுப்புதல், சிறுவர் சுற்றாடல் பாதுகாப்பு படையணியை தாபித்தல், மற்றும் ஒரு லட்சம் பலா மரங்களை நடுதல்' எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று பெரியநீலாவணைப் பிரதேசத்தில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் ரி. ஜெ. அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் எம்.எம். முகம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் பலா மரக்கன்றை நாட்டி சிறுவர் தின தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

பெரியநீலாவணை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலில் நடைபெற்ற மரம் நடும் தேசிய சிறுவர் தின நிகழ்வில் சிறுவர்கள் தமது கரங்களால் மகிழ்ச்சியாக மரங்களை நாட்டி இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த நிகழ்வுகளில் பெரிய நீலாவணை விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகள், கல்முனை தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இளைஞர் அமைப்பாளர் சர்மில் ஜஹான், பிரதி அதிபர் எம்.சி.நஸார், மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. எஸ்.சரீபா, கிரீன் லைஃப் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தான் தூதுவர் நெடுந்தீவிற்கு விஜயம் மேற்கோண்டமை சந்தேகத்தை எழுப்புகிறது

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் இரகசியமான முறையில் நெடுந்தீவிற்கு விஜயம் மேற்கொண்டமை பாரிய சந்தேகத்தை எழுப்பியுள்ளதாக வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் தமிழர் தாயகத்தில் உள்ள தீவகத்தில் சீனாவின் முதலீடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், இவ்வாறு பாகிஸ்தான் தூதுவர் இரகசியமான நெடுந்தீவிற்கு விஜயம் மேற்கொண்டமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போது அவர் குறித்த தகவலை தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவிற்கு அருகில் உள்ள குறித்த தீவுப் பகுதியில் எதிரி நாடுகள் நுழைவது தமிழர்களுக்கு மட்டுமின்றி பாரத தேசத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் அவர் இதன்போது எச்சரித்துள்ளார்.

# ஞானசார தேரரிடம் வாக்குமூலம் பேறப்படாது

எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டில் அடிப்படைவாத தாக்குதல் நடத்தப்படலாம் என ஊடகங்களுக்கு கூறியமை சம்பந்தமாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட மாட்டாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



எந்த வகையிலும் ஞானசார தேரரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலத்தை பதிவு செய்ய போவதில்லை எனவும், எனினும் கட்டாயம் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வார்கள் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

இவ்வாறு புலனாய்வுப் பிரிவினர் தேரரிடம் பெற்றுக் கொள்ளும் தகவல்களுக்கு அமைய அச்சுறுத்தல்கள் இருக்குமாயின் அது சம்பந்தமாக அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

Viber

LK Newspapers
BTamil.com

10,000+ அங்கத்தவர்கள்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது




Facebook இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்